தலையங்கம்:

# மகாபாரதப்போரும், கீதோபதேசமும்

மகாபாரதப் போர் பற்றிய வர்ணனையில், குருக்ஷேத்திர யுத்த மைதானத்தில் கௌரவ சேனையும், பாண்டவ சேனையும் எதிரெதிரே அணிவகுத்து போர் தொடுக்கும் ஆயத்த நிலையில் சைகையை - எதிர்நோக்கிக் காத்திருக் கின்றனர். தாரை, தப்பட்டை, எக்காளம் போன்ற போர்ப் பறைகளும், குழல் வாத்தியம், சங்கொலி போன்ற இசைக்கருவிகளும் முழங்கிக் கொண்டிருக்கின்றன. போர் வீரர்கள் ஆர்ப்பரித்து நிற்கின்றனர். இந்த ஆரவாரத்திற்கிடையே யுத்த மைதானத்தில் பகவான் அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்கிறார் என்பதாக உள்ளது.

உண்மையில் பகவான் முன்னிலையில் இம்சையான யுத்தம் குருக்ஷேத்திர மைதானத்தில் நடந்ததா? நடந்தது என்றால் எங்கே நடந்தது? இது பற்றிய ஐயம் இருந்த காரணத்தால், சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த பத்திரிக்கை செய்தியில், குருக்ஷேத்திரத்தில் யுத்தம் நடந்த பகுதி எதுவாக இருக்கும் என்பதை கண்டறிந்து உறுதி செய்வதற்காக, சாஸ்திர நிபுணர்கள், விஞ்ஞானிகள் போன்ற பலருக்கு, அம்மாநில முதல்வரின் சார்பாக அழைப்பு அனுப்பப்பட்டு, அநேகர் இந்த சம்மேளனத்தில் கலந்து கொண்டனர். விவாதம் நடந்தது, விவாதத்தின் முடிவில் மகாபாரத நூலில் உள்ள வர்ணனை யின் அடிப்படையில் இவ்வளவு பெரிய யுத்தம் இங்கு நடந்திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி தெளிவாக இல்லை என்றே தீர்மானம் செய்திருக்கிறார்கள். ஆதலால் கீதையை மொழி பெயர்ப்பு செய்த வேறு பல அறிஞர்களின் கூற்றுப்படியும், யதார்த்தமான கண்ணோட்டத் திலும் மனித மனங்களில் இடைவிடாது நடந்து கொண்டேயிருக்கும் மானசீகப் போர் பற்றிய வர்ணனையாக, மகா பாரதம் படைக்கப் பட்டிருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.

## சங்கமயுகம்
## பொருளடக்கம்

மலர்: 26 பிப்ரவரி-மார்ச் 2013 இதழ்: 6


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | பகவான் வாக்கு | 05 |
| 3. | ஸ்ரீமத் பகவத் கீதையின் சாரம் | 06 |
| 4. | அனுபவ கட்டுரை (ராணி பெகன்). | 11 |
| 5. | மனதை வென்றால் | 15 |
| 6. | வெளி நாட்டு சேவை | 19 |
| 7. | மவுண்ட் அபு அற்புதம் | 24 |
| 8. | பொறாமை அக்னி | 26 |
| 9. | வாழ்க்கைப் பாடம் | 31 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலி ருந்து தொகுத்து வழங்கப் பட்டவையாகும்.

ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**

இந்தக் கருத்து முற்றிலும் சரிதான் என்று நம்ப இடமளிக்கிறது, ஏனெனில் இறைவனுடைய அவதார பூமி பாரதம். இங்கு தான் சிவபகவானுடைய அவதாரத்தின் நினை வார்த்தமாக ஆண்டு தோறும் சிவராத்திரி என்ற பெயரில் விழாவும், பண்டிகையும் கொண்டாடப் படுகிறது. இது பற்றிய உண்மையை இப்போது நாம் அறிந்து கொண்டபடி ஒளிப்புள்ளி வடிவிலான ஜோதி சொரூபமாக விளங்கும் இறைவன், தனது அவதாரத்தின் போது, தன்னை ஜோதி சொரூபம் சிவோஹம் (நான் சிவம். ஜோதி சொரூபமாக இருக்கின்றேன் என்பது பொருள்) என்று அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றார். பாரதத்தில் இறைவன் அவதாரம் செய்திருக்கிறார் என்றால், உலகமனைத்தும், குறிப்பாக பாரத வாசிகள் மிகக்கடினமானதும் தங்களால் செய்ய இயலாததுமான, இக்கட்டான சூழ்நிலையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும், இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காகவே இறைவன் அவதாரம் செய்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது. அப்படியானால் பாரதவாசிகள் எவ்வளவு பாக்கிய சாலிகள்! இவர்களுக்கு உதவுவதற்கு இறைவனே வந்துவிட்டார் என்றால், இவர்களுக்குக் கொடுப்பதற்கு விசேஷமாக ஏதாவது கொண்டு வந்திருப்பாரல்லவா!

நிச்சயமாகக் கொண்டு வந்திருப்பார் என்பதில் எந்த ஒரு ஐயமும் இல்லை. அப்படி யானால் என்ன கொண்டு வந்திருப்பார்? மனித ஆத்மாக்களுக்கு மிக மிக அவசியமானது எதுவோ, அதைத் தான் கொண்டு வந்திருப்பார். அது என்னவாக இருக்கும்? காரண கர்த்தாவாக இருந்து கொண்டு, பாவச்செயல்களை செய்வித்துக் கொண்டிருக்கும் பஞ்ச விகாரங்கள் எனும் எதிரிகள் மீது வெற்றி கொள்ளும் ஞானம் எனும் வாளையும், யோகம் எனும் சக்தி வேலையும் கொண்டு வந்தார். போர் செய்யும் முறையை கற்பித்தார், தலைமை தாங்கி நடத்தியும் மானசீக நோயைக் குணப்படுத்தும் ஆசிகளையும் வழங்கினார், ஆதலால் இது மனிதனுக்கு அவசியமான நேரத்தில் கிடைத்த மாபெரும் பொக்கிஷம் மட்டுமல்ல, பகவான் தன் ஆன்மீகக் குழந்தைகளுக்காகக் கொண்டு வந்த மகத்தான அன்புப் பரிசும் ஆகும்.

இவ்வாறாக இது மானசீக யுத்தம் என்ற காரணத்தினால் மனிதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதன் மூலம் இது ஸ்தூலமான யுத்தம் அல்ல என்பதும் பகவானுடைய சம்மந்த முடையதாயிருக்கிறது என்பதும் நிரூபண மாகிறது. ஆகவே பகவானுடைய சம்மந்தம் என்பது எப்போது, யாருடன், எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பது முக்கியமானதாகும். உலக நாடக அரங்கில் எப்போது மூன்று விதமான குணாதிசயங்கள் உடையவர்கள் இருக்கின்றார் களோ, அந்த சூழ்நிலையைப் பற்றிய வர்ணனை இந்த விதமாக உள்ளது. அதாவது ஒருபக்கம் பாரதத்தின் தேகாபிமானம் மிக்க துன்மார்க்கர் களான கௌரவர்கள் மறுபக்கம் பாரதத்தின் கடவுள் மீது எல்லையற்ற அன்பும், நம்பிக்கையும் கொண்டு, அவர் காட்டும் வழிப்படி, வாழ்க்கை யில் மனம், சொல், செயலில் தூய்மையைக் கடைப்பிடித்து நடக்கின்ற பாண்டவர்கள். அதே சமயத்தில் கடவுள் மீது நம்பிக்கையற்ற, விஞ்ஞானத்தில் நம்பிக்கையுள்ள, சுய நலமும், கர்வமும் மிக்க யாதவர்கள் என்பதாகும். பொதுவாக பகவானுடைய சம்மந்தம் எல்லோ ருடனும் இருக்கும் என்றாலும், யார் பகவான் காட்டும் வழிப்படி நடக்க சித்தமாக இருக்கிறார் களோ, அவர்களோடுதான் பகவானுடைய உண்மையான சம்மந்தம் இருக்க முடியும், அவர்களோடுதான் உரையாடலும் செய்வார் அல்லவா? யாருக்கு பகவானுடன் எல்லையற்ற அன்பும், நம்பிக்கையும் உள்ளதோ, அவர்கள் தான் அவர் சொல்படி நடப்பார்கள் அல்லவா? இதன்படி இவர்கள் தான் பாண்டவர்கள் மற்றும் கோப கோபியர்கள் என்று அழைக்கப்படுபவர்கள். இதில் ஆடவர், மகளிர் என்ற இரு சாராரும் உண்டு, இவர்களுடன் தான் பகவான் ஆன்மீக

உரையாடல் செய்கின்றார். இந்த உரையாடல் ஜீவாத்மாக்கள் சுகமாக வாழ்வதற்கு வழிகாட்டுவ தாகவும், அவ்வளவு இனிமையான குழலோசை யாக காதில் ஒலிப்பதாகவும் இருக்கின்றது. ஆதலால் இந்த உரையாடல் கோப, கோபியர் களுக்கு வழிகாட்டியாக விளங்கும் பகவானுடைய ஆத்ம ஞானம் ஆகும். ஆகவேதான் இது ஸ்ரீமத் பகவத் கீதை. இதனை ஏற்று நடக்கும் கோப, கோபியர் மூலமாக உலகிலுள்ள மற்ற எல்லோருக்கும் சென்றடையும் என்ற காரணத் தால், பகவானுடைய உபதேசம் அர்ஜுனன் ஒருவருக்கு மட்டுமல்ல, எல்லோருக்காகவும் தான் என்பதும் தெளிவாகிறது.

பரமாத்மாவாகிய பகவானிடமிருந்து வாழும் கலையைக் கற்றறிந்து ஜீவாத்மா வானது, மனதின் மீது யுத்தம் செய்து வாகை சூடும் மானசீக யுத்தம் இது என்ற சிறப்பின் காரண மாகவே மகா பாரதப்போர் என்று சாஸ்திரங்களில் பிரதான இடம் பெற்று பிரபல்யமாகியிருக்கிறது, நிலைத்த பெரும் செல்வமாகவும் இருக்கிறது என்ற உண்மை நிரந்தரமாகிவிட்டது. மனதின் மீது போர் தொடுத்த மனிதன், வெற்றியும் கண்டான். பிறகு நடப்பதென்ன? அதாவது தமோபிரதான சம்ஸ்காரமுடைய சாதாரண மனித ஆத்மா, சதோபிரதான சம்ஸ்காரமுடைய தேவாத்மா என்ற உயர்ந்த நிலையுடையதாகி விடுகிறது. ஆகவே பூலோக கலியுகச் சிறையிலி ருந்து விடுதலை அடையும் சுதந்திர ஆத்மாவாக ஆகிவிடுகிறது. கர்ம பந்தனங்களால் கட்டுண்டு பறக்க முடியாமலிருந்த ஆத்ம விமானம், இப்போது பறக்கத்தயார். எங்கே செல்வது? ஆத்மாவுக்கு அழிவில்லை. பூலோக நாடகத் திற்கும் முடிவில்லை. ஆதலால் சிறிது ஒய்விற் காக, தனது சொந்த வீடான, சாந்திதாமம் எனப்படு கின்ற பரந்தாமம் செல்கிறது. சிவபரமாத்மாவாகிய பரமனின் வீடும் இதுவேயாதலால் இது பரந்தாமம். இங்கிருந்து திரும்பவும், நாடகத்தின் ஆரம்ப காட்சியில் நடிப்பதற்காக பூலோகம் வருகின்றது. ஆத்மா திரும்பவும் இங்கு வரும்போது பூலோகம், தேவ, தேவியர் வாழ் வதற்கேற்ற தேவலோகமாக இருக்கின்றது. இந்தக் காலம் பூலோகத்தின் பொற்காலம். இது சத்யுகம் என அழைக்கப்படுகிறது. இதன் மூலம் சத்யுகம் பிறப்பதற்கு, சிறிது முற்பட்ட காலத்தில் தான் பகவான் உபதேசம் செய்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது ஆதலால் பகவானுடைய உபதேசம் துவாபர யுகத்தின் இறுதியில் அல்ல என்பதும் கலியுகத்தின் இறுதியில் தான் என்பதே சரியானதாகும்.

உபதேசம் செய்த பகவான் யார்? இது மிக முக்கியமானதாக இருக்கின்றது. இதைப் பற்றிய அறியாமையின் காரணமாகவே ஒன்றுபட்டிருக்க வேண்டிய மனிதன் வேறுபட்டு விலகி வாழும் சூழ்நிலை உண்டாகிவிட்டது. இன்றைய நிலையில் வெவ்வேறு நம்பிக்கை உடையவராக இருந்தாலும் எல்லோரும் கடவுள் நம்பிக்கையுடையவர்களே. ஆனால் அந்தக் கடவுள் யார்? என்பதில் ஒருமைப்பாடு இல்லை. எனினும் அவர் தான் ஆத்மாக்களாகிய அனை வருக்கும் ஆன்மீகத் தந்தை பரமாத்மா. பரமாத்மா ஒருவரே. அவர்தான் கடவுள், இறைவன், பகவான், ஆண்டவர், அல்லாஹ் என்ற பெயர்களால் அழைக்கப்படுபவராக இருக் கின்றார். சதா நிலைத்த தன்மையுடையவராக, பிறவிக்கு அப்பாற்பட்டு அசரீரியாகவே இருக் கின்ற பரமாத்மா ஒருவரைத் தவிர, மற்ற ஆத்மாக்கள் பூஜைக்குரியவராயினும் கூட பிறவியில் கட்டுண்ட தேகதாரிகள். ஆதலால் இவர்கள் தேவதைகள், பரமாத்மாவின் அன்புக்குப் பாத்திரமான குழந்தைகள்.

ஸ்ரீமத் பகவத் கீதை என்பது பகவான் வாக்கு என்பதால் கீதையின் நாயகன் அசரீரியாக விளங்குகின்ற பரமாத்மாவாகவே இருக்க முடியும். இது பரமாத்மா ஒருவருக்கே உரித்தான கடமை. ஏனெனில் பரமாத்மாவினுடைய மகிமையைப் பார்க்கும் போது அவர் சுக கர்த்தா, துக்க ஹர்த்தா (சுகம் அளிப்பவர், துக்கம்

நீக்குபவர்) பதீதபாவனன் (தூய்மையற்ற நிலையிலிருந்து, தூய்மையுடையவராக ஆக்குபவர்) கல்யாணகாரி (மங்களம் அதாவது நன்மையே செய்பவர்) என்ற காரணப் பெயர்கள் மூலம் புரிந்து கொள்ள முடியும். இப்போது கலி யுகத்தின் இறுதி நேரம். இராஜயோகம் எனும் வாழ்க்கைக் கலையை திரும்பவும் பகவான், கற்பிக்கின்றார். நான் இராஜயோகம் கற்பிக்கின்றேன், காமம் மகா சத்ரு என்பதுதான் பகவானுடைய உபதேசமாக உள்ளது என்பதை கவனமாகக் கருத்தில் கொள்ள வேண்டும் அந்த கீதோபதேசம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. விழிப்படைவதற்கான தருணமிதுதான் இப்போதில்லையேல் இன்னும் 5000 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய திருக்கும். **வாய்மையே வெல்லும் (சத்யமேவ ஜெயதே) !**

## கடவுளின் உண்மையான அன்பு

கடவுள் நமக்கு உண்மையான அன்பைத் தருகின்றார். இதனை நம் இதயத்தில் நிரப்பிக் கொள்வதற்கான திறவுகோல். நம்முடைய நேர்மை எனும் குணத்தில் அடங்கியுள்ளது. நான் கடவுளிடம் எதையும் மறைக்கவில்லை. மறைக்கவும் முடியாது. ஏனெனில் என்னை அவர் நன்கு அறிவார். நானும் அவரை நன்கு அறிவேன்.

கடவுளிடம் உண்மையாக நடந்து கொள்ளும் அளவுக்கு, ஆத்மாவானது அவரிடமிருந்து பெறுகின்ற தகுதியுடையதாகிறது. நம் இதயத்தில் கடவுளுக்காக எவ்வளவு உண்மையான அன்பு இருக்குமோ, அவ்வளவு கடவுளிடமிருந்து உண்மையான அன்பைப் பெறுவோம்.


**FORM VI**

**Statement about ownership and other particulars about sangama yugam (tamil)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Shanthi Dham, Plot No.:3702, Q-96, 3rd Avenue, Annanagar, Chennai-40 |
| 2. Periodicity of Publication | : | Bi-Monthly |
| 3. Printers Name | : | T. THIYAKESAN |
| Nationality | : | Indian |
| Address | : | 2/3, Weavers St., Thankesh Printers, Triplicane, Chennai-5 |
| 4. Publisher's Name | : | B.K. ANNAPOORNA |
| Nationality | : | Indian |
| Address | : | Shanti Dham, Plot No.3702, Q-96, 3rd Avenue, Annanagar, Chennai-40 Ph: 26266765, 26267441 |

I, B.K. Annapoorna hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date:31.03.2013

**(SD) B. K. ANNAPOORNA,**
Signature of Publisher.




## பகவான் வாக்கு

இனிமையான குழந்தைகளே !

காலத்தின் மதிப்பை உணருங்கள் வீணான விஷயங்களில் காலம் விரயமாகாமல் கவனமாக இருங்கள். உண்மையான விவேகியாகவும், மகான் ஆத்மாவாகவும் ஆக வேண்டிய நேரம் இந்த நேரம். கடந்த 63 ஜென்மங்களாக நேரம் வீணாகக் கழிந்து விட்டது. இதனால் உங்களுடைய வாழ்க்கை சுகம், சாந்தியின் அனுபவமின்றி சாரமற்றதாகி விட்டது.

ஆதலால் தன்னை பாபாவின் உண்மையான குழந்தையாகவும், யக்ஞ இரட்சகனாகவும், விஷ்வ மகா இராஜனாகவும் தன்னை உன்னத நிலைக்கு உயர்த்திக் கொள்வதற்காக இந்த கடைசி ஒரு ஜென்மம் தான் உள்ளது. இதிலும் எத்தனை விநாடிகள் சொந்தமானது என்பதில் உத்தரவாதமில்லை. ஆதலால் இதையும் வீணாக்கி விடக்கூடாது.

இன்றைய சங்கமயுகத்தின் ஒவ்வொரு வினாடியும் வைரம் போன்றது. ஆன்மீக உன்னதிக்கான வருமானத்தைச் சேமிக்கும் சீசன் இப்போது தான். இதை மறந்து விடலாகாது. மேலும் உங்களுடைய ஒவ்வொரு எண்ணத்தையும், உன்னிப்பாக சோதியுங்கள். முழுமை அடையுங்கள். இதில் பிறருக்கும் உதவுங்கள். இவ்வாறாக யாரொருவர் நேரத்தை மதித்து நடக்கிறார்களோ, அவர்களே மகான் ஆத்மாவாக ஆகின்றார்கள்.



# ஸ்ரீமத் பகவத் கீதையின் சத்திய சாராம்சம்

தமிழாக்கம்

மகாபாரத நூலில் கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் யுத்த மைதானத்தில் ஸ்ரீ கிருஷ்ணர், அர்ஜுனனுக்கு கீதை ஞானம் உபதேசித்தார் என்று மக்கள் நம்பு கின்றனர். மகாபாரத நூல் ஆரம்பத்தில் ஜய என்ற பெயரில் விளங்கியது. அதில் எண்ணாயிரம் சுலோகங்களே இருந்தன. பின்னர் இதன் பெயர் பாரதம் என்றும் மகாபாரதம் என்றும் விளங்கி வரலாயிற்று. நாளடைவில் சுலோகங்கள் கொஞ்சம், கொஞ்சமாகச் சேர்க்கப் பட்டு, இன்று இதன் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு லட்சம் ஆகிவிட்டது. இந்தக் கணக்குப்படி காலப்போக்கில் இந்த நூல் பதின்மூன்று மடங்கு வளர்க்கப்பட்டிருக்கிறது என்பது விளங்கும்.

ஆதலால் இதில் எது உண்மை, எது கற்பனை அல்லது இடைச் சேர்க்கை என்ற சிக்கலை விடுவிப்பது மிகவும் கடினமே, ஆதலால் கீதை அருளியது யாரோ அவர் ஒருவரைத் தவிர வேறு யாராலும் கீதையின் யதார்த்தமான இரகசியத்தை அறிவிக்க இயலாது. ஆதலால் தற்சமயம் மீண்டும் பகவான் தனது அவதாரத் தின் வாயிலாக கீதை ஞானம் பற்றி என்ன உபதேசிக்கின்றார் என்று பார்ப்போம். கீதையின் சத்திய சாராம்சத்தை அறிந்து கொள்வதற்கு இது மிகவும் உதவியாயிருக்கக்கூடும்.

## மனோவிகாரங்கள் மீதான யுத்தம்

பகவான் மனிதனுக்குத் தூய்மையாகவும், நிர்விகாரியாகவும் (தீயவைகளிலிருந்து விடுபட்ட) தெய்வீக சம்பிரதாயம் மற்றும் ஆன்மாவைப் புரிந்து, உணர்ந்து, ஆன்மீக ஸ்திதியில் நிலைத்த யோகி வாழ்க்கை வாழ்வதற்காகவே கீதை ஞான மளித்தார். மனிதன் ஞானம் எனும் கூரிய வாள் கொண்டு காம விகாரம் எனும் எதிரியை மாய்க்க வேண்டும் என்றும், யோக பலத்தின் மூலம் கர்மேந்திரியங்கள் மீதும், ஆழ்ந்த அஞ்ஞான உறக்கத்தின் மீதும் வெற்றி கொள்ளவும். ஆன்மீக சக்தியால் காமம், கோபம், பேராசை போன்ற விகாரங்களைத் தோற்கடிக் கவுமே, விலைமதிக்க முடியாத இந்த ஞானம் அருளினார். மனிதனுடைய உன்னத வாழ்விற்க ாகவே உபதேசிக்கப்பட்ட கீதையை, தாய் ஸ்தானத்தில் வைத்து போற்ற வேண்டிய கீதையை, இம்சையுள்ள பயங்கர யுத்த காண்ட மாகக் கற்பித்து மக்களுக்கு வழங்கி இருப்பதற் கான காரணம் வேறு ஏதோ இருக்கலாம்.

## கீதை துவாபர யுகத்தின் இறுதியில் உபதேசிக்கப்பட்டதா?

கீதை ஞானம் அருளியதன் குறிக் கோளைப் புரிந்து கொண்டு, கீதை உபதேசிக்கப்பட்டது எப்போது என்பதைப் புரிந்து கொள்வது அவசியம். துவாபரயுகத்தை அடுத்து வரும் யுகம் கலியுகம். தர்மத்தின் சுவடுகள் மறைந்து, அசுர லட்சணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பெருகி அதர்மத்தின் கை ஓங்கியிருக்கும் யுகம். கீதை அருளியதன் நோக்கம் தர்மத்தை ஸ்தாபிப் பதற்காக. ஆனால் துவாபரயுக இறுதியில் கீதை உபதேசிக்கப்பட்டது என்ற நம்பிக்கை சரியான தல்ல. ஏனெனில் இதனையடுத்து கலியுகம் பிறந்திருக்கிறது. இது அதர்மம் நிறைந்த யுகமாக இருக்கின்றது. கீதை உபதேசத்தின் மூலம் கலி யுகத்தையா ஸ்தாபித்தார்? நிச்சயமாக இல்லை. அதர்மத்தை அழித்து தூய்மையும், தெய்வீக சம்பிரதாயமுள்ள, சதோபிரதான மான, தர்மம் நிறைந்த சத்யுகம், திரேதாயுகம் என்னும் தேவதா யுகத்தை ஸ்தாபித்தார் என்பதே உண்மை.

இயல்பாகவே சிரேஷ்ட கர்மங்கள் நடை முறையில் இருக்கும் யுகம். கிருதா யுகம் ஆதலால் இது சத்யுகம் என அறியப்படுகிறது. பகவானுடைய கீதை உபதேசம் கலியுகத்தின் இறுதிக்கும், சத்யுக ஆரம்பத்திற்கும் இடைப் பட்ட காலத்தில் தான் நடந்திருக்க வேண்டும் என்பதே சரியானது. காரணம் இதன் பின் தர்மம் நிறைந்த சத்யுகம் ஆரம்பமாகிறது. ஆகவே கீதை அருளியது துவாபரயுகத்தின் இறுதியில் அல்ல. கலியுகத்தின் இறுதியில் தான் என்பதை ஏற்றுக் கொள்வதே கீதை அபிமானிகளுக்குப் பெருமை சேர்ப்பதாக இருக்கும்.

### கீதை உபதேசம் செய்தது யார்?

நாம் அறிய வேண்டிய முக்கியமான இரகசியம், கீதை அருளிய பகவான் யார்? எங்கே, எப்படி இருக்கின்றார் என்பதாகும். ஏனெனில் ஶ்ரீமத் பகவத்கீதை என்ற நூலின் ஆரம்பத் திலேயே மயில் தோகை அலங்கரிக்கும் மகுடம் அணிந்த ஶ்ரீ கிருஷ்ணருடைய சித்திரம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக கீதை உபதேசம் செய்தது ஶ்ரீகிருஷ்ணர் என்றே மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர். இத்தகைய நம்பிக்கையுடையவர்கள் கீதையின் மூலமாக கருத்தைப் புரிந்துக் கொள்ளவில்லை எனக் கூறலாம். அதாவது தேகம் மற்றும் தேகி (ஆத்மா), பிறகு ஷேத்திரம் (இடம்) மற்றும் க்ஷேத்ரக்ஞன் (ஜீவாத்மா) இவற்றைப் புரிந்து கொள்வது அவசியம். எப்படி ஆத்மா என்ற சொல் தேகத்தைக் குறிப்பதாகாதோ, அதே போல பரமாத்மா (பகவான்) என்ற சொல்லும் தேகதாரியை தேகமுள்ளவரைக் குறிப்பதாகாது. இதன் மூலம், தேக ரூபத்தில் மயில் தோகை மகுடதாரி பகவானுடைய ரூபமில்லை என்றா கிறது. அப்படியானால் பகவானுடைய உண்மை சொரூபம் எப்படி இருக்கும்? இந்த இரக சியத்தை அறிவதற்கு முதலில் ஆத்மாவின் சொரூபத்தை அறிவது அவசியம். ஆத்மாவின் சொரூபம் ஜோதி புள்ளி வடிவம். பரமாத்மா ஆத்மாக்களிலெல்லாம் அதி சிரேஷ்டமானவர். ஆகவே அவருடைய சொரூபம் ஜோதி புள்ளி வடிவமேயாகும். அவர் ஞானம், சாந்தம், சர்வசக்தி, ஆனந்தம், பிரேமை ஆகிய குணங் களில் சிந்துவாக (அபரிதமான) வும் இருக் கின்றார். மேலும் பகவானுடைய உருவம் ஶ்ரீ கிருஷ்ணரைப் போன்றோ, அல்லது வேறொரு சரீர உருவைக் கொண்டதாகவோ, இருக்கு மானால், பகவானை திவ்ய திருஷ்டி மூலமாகவே பார்க்க முடியும் என்றும், பகவான் திவ்ய திருஷ்டி அளிக்கிறார் என்றும் கூற வேண்டிய அவசியம் என்ன? ஆத்மாவைப் போன்றே, பகவானுடைய உருவமும் ஜோதி புள்ளி வடிவ மாதலால் பாரதத்தில் சிவலிங்கம் என்ற உருவில், பெயரில் பூஜை நடக்கிறது பகவானுடைய சொரூபம் நிராகார் (சரீரமற்றவர்). ஏனெனில் ஜோதி புள்ளிக்கு வேறு அமைப்போ, தோற்றமோ இல்லை. பகவானுடைய இதே ரூபத்தையே பெரிய அளவில் மெக்காவில் முஸ்லீம்கள் சங்கே-அஸ்வத் என்னும் பெயரில் விசேஷ மரியாதை செலுத்துகின்றனர். இதை பாரதவாசி கள் மகேஷ்வர் என்றழைக்கின்றனர். இதற்கு பைபிளில் ஜெகோவா என்று பெயர் இவ்வாறாக அகிலம் முழுமைக்கும் கல்யாணகாரி (நன்மை செய்பவர்) ஆக ஏற்கப்பட்டதன் காரணமாக பாரதத்தில் சிவா என்னும் காரணப் பெயர் பிரசித்தமாக உள்ளது. அவரே பிரம்மா, விஷ்ணு சங்கரைப் படைப்பவர். ஆதலால் சிவனுடைய உருவம் மகாதேவன் என அழைக் கப்படும் சங்கருடைய உருவத்தை ஒத்ததல்ல. சிவன் அசரீரி. சங்கர் சூட்சும சரீரதாரி. ஆதலால் இரண்டும் ஒருவரைக் குறிப்பதாகாது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

### கீதை பற்றிய மகத்துவம் வாய்ந்த இதர இரகசியங்கள்

கீதையில் பகவான் அநேகவிதமான பெயர்களில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றார். இவற்றுள் கிருஷ்ணர் என்ற பெயரும் அடங்கும். இதன் காரணமாகவும் கீதை அருளியது ஶ்ரீ கிருஷ்ணர் என்று கருதியிருக்கக்கூடும்,

பொதுவாக பகவானுடைய நாமம் (பெயர்) அவரது குண விசேஷம் அல்லது ஆற்றுகின்ற காரியம் (கடமை) ஆகியவற்றின் அடிப்படை யிலேயே காரணப் பெயர்களாக அல்லது மகிமை போற்றுவதாகவே சூட்டப்பட்டிருப்பது விளங்கும். ஆதலால் பகவத்கீதையில் பகவானைக் குறிப்பதாக உள்ள கிருஷ்ணர் என்பது சரீரமுள்ள நபரைக் குறிக்கும் பொதுவான பெயரல்ல. கீதை மகா வாக்கியத்தின்படி பகவான் சூரியனைப் போன்று பிரகாசிப்பவர் என்பதாக உள்ளது. திவ்ய திருஷ்டி மூலமே பகவானைப்பார்க்க முடியும் என்றும் கூறப்படுகிறது. மேலும் பகவான் ஆகர்ஷண மூர்த்தி, ஆனந்த சொரூபன் என வர்ணனை உள்ளது. தியானம் செய்பவர்களின் பாவங்களை நிவாரணம் செய்பவர் என்ற இந்த அர்த்தத்தில் தான், ஜோதி புள்ளி வடிவமாக விளங்கும் பரமாத்மா, அவரது குணம் கடமை மற்றும் ஆத்மீக ரீதியாக கிருஷ்ணர் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார் என்பதே பொருத்த மானதாகும். மேலும் கிருஷ்ணன் என்ற பெயர் குண விசேஷம் அல்லது கடமையின் அடிப் படையிலல்லாமல், சரீரமுள்ள நபருக்கே இடப் பட்டதாக இருந்திருந்தால், அப்பெயரே தொடர்ந்து உபயோகப்படுத்தப்பட்டிருக்கும். ஆதலால் ஜனார்த்தனன், கேசவன், ஹிருஷிகேஷ், கோவிந்தன், அச்சுதன் என்ற பெயர்களெல்லாம் பிரயோகம் செய்யப் பட்டிருப்பது கவனத்திற்குரியதாக இருக்கிறது. இப்பெயர் களெல்லாமே சொரூபத்தை உணர்த்தும் அறிமுகமாக அமைந்திருக்கும் போது, கிருஷ்ணன் என்ற பெயர் மட்டும் ஒரு சரீரமுள்ளவரைக் குறிப்பதாக அர்த்தம் செய்வது சரியான முடிவுதானா? உதாரணமாக ஜனங் களுடைய பிரார்த்தனையை ஏற்பவன் என்ற காரணத்தினால், ஜனார்த்தனன் என்றும், பிரம்மா, விஷ்ணு, சங்கர் மூலமாகக் கடமையாற்றுவதன் காரணமாக கேசவன் என்றும் அழைக்கப்படு கின்றார். இதைப் போலவே, ஆனந்த சொரூபன் அல்லது ஆகர்ஷண மூர்த்தியாயிருப்பதன் காரணமாகவே கிருஷ்ணன் என்ற சொல் பிரயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விசேஷங்களுக்குரிய உருவம் ஜோதி சொரூபம் என்பதை மறந்துவிடலாகாது.

## அர்ஜுனன் யார் ?

இதுவும் புரிந்துக் கொள்ளத் தகுதியுடைய ஒரு இரகசியமாகும். எப்படி, கிருஷ்ணன், ஜனார்த்தனன், கேசவன் என்ற பெயர்கள் ஜோதி புள்ளி வடிவான பகவானுடைய குண விசேஷத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறதோ, அதுபோல அர்ஜுனனுக்கு அனகன், பரந்தபன், குடாகேஷ் என்ற பெயர்களும் உண்டு. அர்ஜுனன் என்பதும், இதர பெயர்களும் குண விசேஷத்தின் அடிப்படை யிலானதேயாகும். பாவத்தால் தீண்டப்படாதவன் என்பதால் அனகன் என்றும், நித்திரையை வென்றவன் என்பதால் குடாகேஷ் என்றும், தவம் செய்யும் யோகி என்ற பொருளில் பரந்தபன் என்றும் தூய்மை மற்றும் சுகத்திற் கான முயற்சியில் ஈடுபட்டவன் என்பதால் **பாரத்** என்றும் வழங்கும் பெயர்கள் அர்ஜுனனுக்கே உரித்தானவைகளாகும் இது போன்று தூய்மை யுள்ளவன் அல்லது புனிதமானவன் என்ற பொருளில் அர்ஜுனன் என்ற சொல் பிரம்மா வுக்கும் வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் கீதை ஞானம் பிரம்மாவின் சரீர ஆதாரத்தின் மூலம் வழங்கப்பட்டதன் காரணமாக, பிரஜாபிதா பிரம்மா ஞானிகளிலெல்லாம் சிரேஷ்ட மானவர் எனக் கருதப்படுகின்றார். கீதா ஞான உபதேசம் செய்வ தற்காக ஜோதி புள்ளி வடிவான பரமாத்மாவாகிய சிவன் பிரம்மாவின் சரீரத்தில் அவருடைய ஆத்மாவின் பக்கத்தில் ஒன்றாக அமர்ந்தார் என்ற பாக்கியத்தின் காரணமாக பிரம்மா ஆதி பிதா என்றும் ஜெகத்பிதா என்றும் மகிமைக் குரியவரானார்.

## அர்ஜுனனுடைய ரதம்

கீதை ஞானத்தில், சரீரம் ஆத்மாவின் ஆடை அல்லது வீடு என்று கூறப்பட்டுள்ளது. இதுபோல

சரீரம் ஒரு ரதத்திற்கு உவமானமாக வும் சொல்லப்படுகிறது. மனம் இந்த ரதத்தின் குதிரைகள். உபதேசம் அல்லது ஞானம் கேட்கின்ற நரன் அதாவது மனிதன் (குதிரை களின்) புத்தி எனும் லகானை பகவானிடம் ஒப்படைத்துவிட வேண்டும். பிரஜாபிதா பிரம்மாவுக்கு அர்ஜுனன் என்ற பெயரும் உண்டு என இதற்கு முன் தெரிந்து கொண்டோம். இவருடைய சரீரத்தில் தான் ஜோதிபுள்ளி வடிவான பரமாத்மா பிரவேசித்தார். இவ்வகை யில் பகவான் அர்ஜுனனுடைய சாரதி ஆனார். **சாரதி என்பதன் பொருள் ஒரே ரதத்தில் இருவர் சவாரி** செய்தல் என்பதாகும். அர்ஜுனன் அதாவது பிரம்மாவின் சரீரத்தில் அந்த சரீரத்தை ஏற்கனவே ஆட்கொண்ட ஆத்மா உள்ளது. இப்பொழுது பகவானும், ஜோதி புள்ளி வடிவில், அதே சரீரத்தில் அந்த ஆத்மா வின் பக்கத்தில் அமர்ந்து, அதன் வாய் மூலமாக கீதை ஞானம் உபதேசித்தார். அர்ஜுனன் மட்டுமல்லாது இதைக் கேட்ட மனிதர்களும் ஞானப்பிறவி எடுத்தனர். அதாவது இதுவரை வாழ்ந்து வந்த வாழ்க்கைக் கும், இப்பொழுது வாழுகின்ற வாழ்க்கைக்கும் இரவு, பகல் வித்தியாசமுள்ளது. ஆகவே இது மறுபிறவியாகக் கருதப்படுகிறது. இதனையே பிரம்மாவின் வாய் மூலமாக பிராமணர்கள் பிறந்தார்கள் என கூறப்பட்டுள்ளது. ஆனால் ரதம் மற்றும் சாரதி என்பதன் உட்பொருளை அறிந்திருந்தாலும், சாஸ்திரம் எழுதியவர்கள், அவருக்கே உரித்தான காரணத்தால், அல்லது மக்கள் எளிதாக புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தேர்ச்சக்கரங்களும் குதிரைகள் பூட்டிய ரதத்தில் ஸ்ரீகிருஷ்ணரை சாரதியாக அமர்த்தி விட்டனர். இதுபற்றி ஏற்கனவே விவரித்திருப்பதன் அடிப்படையில், இதனைச் சரியாகப்புரிதல் வேண்டும்.

## கீதை ஞானமும், கலியுகமும்

பகவான் ஒரே ஒரு அர்ஜுனனுக்கு மட்டும் கீதை உபதேசம் செய்யவில்லை. அர்ஜுனனாகிய பிரம்மாவின் வாய் மூலமாக மனித குல மனைத்துக்குமே கீதை உபதேசித் தார் என்பதாகும். அதர்மம் நிறைந்த கலியுகத் தின் இறுதியில் பெரும்பாலான பெண்கள் மானபங்கம் செய்யப்படுவதும், மனிதன் சூதாட்டத்திலும், மது, போதை மருந்து உட்கொள்ளல் மற்றும் கேளிக்கைகளிலும் ஈடுபட்டு நடத்தை கெட்டுத் திரிவதும், பொருத்த மற்ற உணவுப் பழக்கங்கள், நேர்மையற்ற விவகாரங்கள் மூலமாக அதர்மம் உச்ச கட்டத்தை அடைந்து விடுகிறது.

இன்றைய இந்த நிலை பற்றி ஒரு கணம் சிந்திப்போமேயானால் மனிதன் தானாகவே உருவாக்கிய அசுர சுபாவத்தால் ஆட்டி வைக்கப் படுகிறான் என்ற உண்மை புலப்படும். ஒரு பக்கம் இந்த அசுரப்படைப்பின் மகா விநாசத்திற் கான பயங்கர ஆயுதங்கள். மறுபக்கம் பகவான் அருளிய ஞானமும், இராஜயோகக் கல்வியும். அதாவது ஒருபக்கம் துரியோதனன், துச்சாதனன், திருதராஷ்டிரக் கௌரவர்கள் தயார் நிலையில் இருக்கின்றார்கள். மறுபக்கம் பகவானிடம் அன்பு கொண்டு அவரைச் சார்ந்துள்ள பாண்டவர்கள். ஞானம் மற்றும் யோக பலத்தின் மூலம், காமம், கோபத்தின் மீது வெற்றியடைவதற்காக, இரகசிய மாக அஹிம்சா யுத்தம் செய்து கொண்டிருக் கிறார்கள். இவ்வாறாக இந்த சமயத்தில் ஒவ்வொருவர் மனதிலும் ஓயாத போராட்டம். ஆதலால், இது மகாபாரதப் போர். இதில் முக்கிய மாக, பரமாத்மா கீதை உபதேசம் செய்வதற்காக தேர்ந்தெடுத்த பூமி பாரதம். உலகிலுள்ள வெவ்வேறு நம்பிக்கையுள்ள மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கும் பூமி. ஆதலால் விகாரங்களால் ஆட்டிப்படைக்கப்படும் மனிதன் ஒவ்வொரு வரும் அவரவர் மனதின் மீது வெற்றி கொள்ளும் யுக்தியையும் சக்தியை யும் அளிக் கின்ற பரமாத்மாவின் உப தேசமே கீதை ஞானம். பாரத தேசத்தில் இப்போது மீண்டும் கற்பிக்கப்படும் இராஜயோகம் எனும் கீதை ஞானம் குறிப்பாக பாரத மக்களுக்கும், இம்

மக்கள் மூலமாக உலகெல்லாம் பயன் பெறும் இதன் அஸ்திவாரத்தில் பாரதத்தில் சொர்க்கம் மலரும்.

பகவத் கீதையின் சத்திய சாராம்சத்தை இந்தக் கோணத்தில் படிக்கும் போது, அதன் முழுப் பயனையும் அடைய முடியும். ஏனெனில் உண்மை என்ன என்பதை அறிய வேண்டிய தருணம் இப்போதுதான். ஞான சூரியன் சிவ பரமாத்மாவின் அவதார உதயத்தால் கருமேகங் களால் சூழப்பட்டிருந்த பாரதத்தின் மகிமை மீண்டும் பிரகாசிக்கட்டும். உலகின் கலங்கரை விளக்காகவும் ஆகட்டும்.

## உங்களுடைய உண்மையான அன்பு

பொய்யான விஷயத்தில் உண்மையான அன்பு முற்றிலும் விருப்பமில்லாததாகவே இருக்கும். மேலெழுந்தவாரியான மனவெழுச்சி உங்களை மேலாக மாத்திரமே வைத்திருக்கும். இது உண்மையான அன்புக்கு ஆதாரமானதாக இருக்காது. உண்மையான அன்பு என்றால், தூய்மையான அன்பு. தூய்மையான அன்பானது, உங்களுடைய உள்ளார்ந்த உண்மை, நற்குணம் மற்றும் மற்றவருக்கு நன்மை செய்யும் விருப்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். மேலோட்டமானதாகவும், மற்றவரை அனுமானிப்பவராகவும் இருந்தால், உண்மையான அன்பு கலப்படமுள்ளதாக ஆகிவிடும். மற்றவருடைய குணத்தால் பாதிக்கப் பட்டிருந்தாலும், கலப்பட முள்ளதாக்கி விடும். ஆதலால் தூய்மையான அன்பு என்றால் என்ன என்பதைப்பற்றிப் புரிந்து கொள்வதற்கான அனைத்து முயற்சியும் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. மேலும் நீங்கள் அடைய விரும்பியது இது தானா? என்பதையும் சோதித்துப் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும்.

உங்களுடைய அன்பு எப்போதும் உண்மையானதாகவே இருக்க வேண்டும். உங்கள் விரோதியானாலும் நீங்கள் அன்பு செலுத்துவதை நிறுத்தி விடக்கூடாது, நீங்கள் மனப்பூர்வமாக அன்பு செலுத்த வேண்டும். உங்கள் அன்பு உண்மையானது தான் என்று உள்ளத்தில் கை வைத்துச் சொல்லும்படியாக இருக்க வேண்டும். எல்லோருக்கும் உண்மையான அன்பு தான் வேண்டும். இதைத்தான் நீங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

## சங்கமயுகம் இதழ் பற்றிய அறிவிப்பு

2012-2013 ஆம் ஆண்டில் இந்த இதழ் 6வது கடைசி இதழ். அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் (2013-2014) சங்கமயுகம் தனிப்பிரதி விலை ரூ.8/- ஆகவும் ஆண்டு சந்தா அஞ்சல் வழி ரூ.60/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டு சந்தா ரூ.60/- மணியார்டர் மூலம் ஜனவரி 2013 முதல் அனுப்பலாம். **DD** மூலம் அனுப்பும் சென்டர்கள் வழக்கம்போல் **"SANGAMAYUGAM**' என்ற பெயரில் எடுத்து சாந்திதாம், சென்னை முகவரிக்கு அனுப்பவும். மணியார்டர் மூலம் அனுப்பும் தனி நபர் மணியார்டர் படிவத்தில் கீழ் பகுதியில் முகவரியும், சங்கமயுக இதழுக்கு என தவறாது குறிப்பிடவும். **DD** அனுப்பும் போது அத்துடன் இணைக்கப்படும் கடிதத்தில் முகவரி, காப்பிகளின் எண்ணிக்கை மற்றும் சங்கமயுகம் இதழ் என தயவு செய்து குறிப்பிடவும். நன்றி! ஆசிரியர்.



# பாபாவின் கை எப்பொழுதுமே தலையின் மேல் இருக்கிறது

(பிரம்மா குமாரி ராணி, முஸாஃபர்பூர் அவர்களுடைய கட்டுரையின் தமிழாக்கம் -நன்றி ஞானமிர்தம், ஜனவரி 2013)

நான் முதன் முறையாக (6 வயது) தில்லியிலுள்ள கமலாநகர் சேவை மையத்திற்கு சென்றபோது வெண்ணிற ஆடை உடுத்தியிருந்த சகோதரிகளைப் பார்த்தபோது மிகவும் கவரப்பட்டேன். அவர்கள் கிராம்ஃபோனில் ஒரு பாடலை கேட்டுக் கொண்டிருந்தனர்- இந்த பாவங்கள் நிறைந்த உலகிலிருந்து எங்காவது தூரமாக அழைத்துச் செல்லுங்கள்.... பிறகு ஆத்மா பற்றிய பாடத்தை எடுத்துரைத்தனர். என்னுடைய இந்த முதல் சந்திப்பு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது, ஒருவித ஈர்ப்பு சக்தியால் கவரப்பட்டு காலை மாலை இரண்டு வேளையும் வகுப்பிற்கு செல்ல ஆரம்பித்தேன். தினம் காலை யோகா செய்தேன், முரளி கேட்டேன். குழந்தை கள் தங்கள் தாயுடன் வருகிறார்கள். இங்குமங்கும் சுற்றிவிட்டு திரும்ப சென்றுவிடுகிறார்கள், நான் அவ்வாறு செய்வதில்லை.

### பாபா விஷ்ணு ரூபத்தை காண்பித்தார் :

ஐந்து - ஆறு மாதங்களுக்குப் பிறகு தான் மவுண்ட் அபு வந்தேன் ஹிஸ்டரி ஹாலில் பாபா-மம்மாவிற்கு முன்பாக வகுப்பில் அமர்ந்திருந்தேன். யக்ஞத்தைச் சேர்ந்த குழந்தைகளும் இருந்தனர். என்னுடன் இரண்டு சகோதரிகள், ஒரு சகோதரன், தாய் தந்தை இவர்களுடன் முதல் வரிசையில் அமர்ந்திருந்தோம்.

முதன் முறையாக பாபாவின் மடியில் அமர்ந்த போது, பாபா மிகுந்த அன்பு செய்தார். பாபா விஷ்ணுவாக காட்சியளித்தார். மிகப்பெரிய உருவமாகவும் காட்சியளித்தார். இந்த பாபாவினுடையவராக ஆகிவிடுவோமே என்ற எண்ணம் மனதில் எழுந்தது, முழு நாளும் பாபாவுடனேயே இருந்து விடவேண்டும் என்பது போன்ற ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. பாபா எங்கேயோ, நான் அங்கே, பாபாவைத் தவிர வேறெங்குமே கண் பார்வை செல்லவில்லை. பாபா கூறினார்- குழந்தாய், எந்த சமயமும் பாபாவின் அறைக்கு வரலாம், (உன்னை) யாரும் தடுத்து நிறுத்த மாட்டார்கள்.

### காசநோய் (ஆஸ்துமா) சரியாகிவிட்டது

எனக்கு சிறுவயதிலிருந்தே காச நோய் இருந்தது. பாபா தன் அறையிலுள்ள மெத்தையில் உறங்க வைத்தார். மம்மாவிடம் மம்மா எத்தனை தடவை வந்தாலும், போனாலும் இந்த குழந்தை மீது அன்பு செலுத்த வேண்டும் என்று கூறினார். பல முறை வந்து போனபோதெல்லாம் மம்மா அவர்கள் என்னிடம் மிகுந்த அன்பு செலுத்தினார். நான் அன்று மாலையே சரியாகிவிட்டேன். பாபாவினுடைய பலவித ரூபங்களைப் பார்த்தேன். ஒவ்வொரு முறையும் பாபாவிடம் சென்றபோதெல்லாம் வெண்ணிற ஆடை (அங்கி) தைத்துக்கொடுத்தார். அதன் பிறகு வெண்ணிற ஆடையைத் தவிர வேறு நிற ஆடைகளை அணிவதே இல்லை. பள்ளிக் கூடம் செல்லும் போது கூட வெள்ளை ஆடைகளையே அணியலானேன். பள்ளியில் ஒரு நிகழ்ச்சியில் நாட்டியம் ஆடுமாறு ஆசிரியை கூறினார். முதலில் மம்மாவிடம் கேட்போம் பிறகு ஆடுவோம் என்று எண்ணினேன். மம்மா ஒப்புதல் அளித்தார். அந்த சிறிய வயதிலும் கூட உணவு முதலானவைகளில் ஈஸ்வரிய மரியாதையை கடைப்பிடித்தேன்.

### பாபா வதனத்திற்கு அனுப்பி வைத்தார்.

எங்களுக்கு எந்த நேரத்திலும் பாபாவின் அறைக்குச் செல்ல அனுமதி இருந்தது. ஒரு பகல் நேரம் அறையில் பாபா ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அங்கு சென்றதும் உள்ளே வரச்சொல்லி பாபா சைகை காட்டினார். பாபாவின் அறையின்

சூழ்நிலை சக்தி நிறைந்ததாகவும் அமைதியாகவும் இருந்தது. பாபாவின் செய்தி தொடர்பாளராக ரோச்சா சகோதரி (மம்மாவின் லௌகீக தாய்) நாற்காலி யில் அமர்ந்திருந்தார். ரோச்சா சகோதரி அவர் களுக்கு பாபா ஏதோ ஒரு செய்தியைக் கூறினார், அவர் தியானத்தில் ஆழ்ந்து விட்டார். பாபா அவர் ஆசனத்திற்கு எதிரில் என்னை அமர வைத்தார். பிறகு கேட்டார்- குழந்தாய்! நீ எப்போதாவது தியானத்தில் சென்றதுண்டா? இல்லை பாபா என்றேன். மீண்டும் பாபா கேட்டார் நான் அனுப்பினால் செல்வாயா? சரி பாபா என்றேன். நல்லது குழந்தாய் நான் முதன் முதலாக இன்று உன்னை தியானத்தில் அனுப்புகிறேன் என்றார். பாபாவினுடைய திருஷ்டி அந்த மாதிரி கிடைத்துக் கொண்டே இருந்தது, நான் இலேசாக, முற்றிலும் இலேசாகவே ஆகி விட்டேன். பிறகு என் தலை மீது பாபாவின் திருக்கரத்தை வைத்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு நான் வதனம் சென்றடைந் தேன். வதனத்தின் காட்சி களை கண்டு களித்தேன். அங்கு பாபாவைப் பார்த்தேன். எவ்வளவு நேரம் நான் அங்கிருந்தேன் என்பது தெரியவில்லை. பிறகு பாபா என்னை கீழே சுய நிலைக்குக் கொண்டு வந்தார். கீழே வந்த போது என் கண்கள் அதிக சிவப்பாக இருந்தது. மேலே இருந்தபோது அவ்வளவு ஆனந்தம் அனுபவ மாயிற்று. இதே போதையில் இருக்க வேண்டும் என்று பாபா கூறினார். இன்று கூட பாபாவின் திருக்கரம் என் தலை மீது இருப்பதாகவே உணர் கின்றேன். ஏதாவதொரு விசயம் அல்லது எண்ணம் வந்தால் பாபாவுக்கு முன்பாக அமர்ந் திருக்கும் உணர்வு ஏற்படுகிறது. பாபா தான் பொறுப்பாளர் ஆவார். எனவே ஒரு போதும் தலை சுமையாக ஆவதில்லை (குழப்பமடைவதில்லை) இது வரதானம்.

### சொற்பொழிவை எழுதுவது மற்றும் ஆற்றுவதை கற்றுக் கொடுத்தார்.

ஒரு முறை மதுபன்னில் பாபா முரளி வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். நான் அவருக்கு முன்பாக அமர்ந்திருந்தேன். முரளி முடிந்தவுடன் பாபா என்னிடம் கூறினார்-இன்று முரளியில் என்ன கூறப்பட்டதோ அதை சொற் பொழிவு போல எழுதி 10 மணிக்கு பாபா அறைக்கு கொண்டு வந்து காண்பிக்க வேண்டு மென்றார். அது ரக்ஷா பந்தன் பற்றியது, நான் முரளியிலி ருந்து கேட்ட குறிப்புகளை எழுதியிருந்தேன். ரக்ஷா பந்தன் பற்றி இரண்டு - மூன்று பக்கங்கள் சொற்பொழிவாக எழுதிக் கொண்டு 10 மணிக்கு முன்பாகவே பாபா அறைக்கு சென்றுவிட்டேன். படித்துக் காண்பிக்கும்படி பாபா கூறினார். நான் படிக்கும் போதே பாபா எல்லாவற்றையும் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். இடையில் குழந்தாய் ! இதை யாரையாவது கேட்டு எழுதினாயா? என்று வினவினார். நானே தான் எழுதினேன் பாபா என்று கூறினேன். நன்றாக எழுதியிருக்கிறாய் என்றார், எடுத்துரைக்கும் முறை கூட நன்றாக உள்ளது எனக்கூறினார். பிறகு பிருஜு சாந்தா தாதியிடம் இதை சிந்தி மொழியில் எழுதித் தாருங்கள், இதை அமிர்த வேளை வகுப்பில் படிக்க வேண்டும் என்றார்.

மறுநாள் மீண்டும் ரக்ஷா பந்தன் பற்றிய வகுப்பையே நடத்தினார். முன் தினம் போலவே முரளி பாயிண்டுகளை எழுதி 10 மணிக்கு அறைக்கு வரும்படி சொன்னார். பிறகு படித்துக் காட்டச் சொன்னார். நான் படித்தேன், அப்போது இரண்டு நாட்களுடையதையும் சேர்த்து கூறும் படி சொன்னார். அவர் கூறியபடி படித்தேன். அதன் பின் என்னை இன்றிரவு முரளி வகுப்பு நடத்தும்படியும், அதை தான் கேட்கப் போவதாக வும் சொன்னார். ஹிஸ்டரி ஹாலில் இரவு வகுப்பில் சொற்பொழிவு செய்தேன். பாபா வராண்டாவில் அங்குமிங்குமாக நடந்து கொண்டே முழு சொற்பொழிவையும் கேட்டார். முடிந்த பின் பாபா ஹாலுக்குள் வந்தார், எனக்கு நிறைய வரதானங்கள் அளித்தார்.

எனக்கு ஆரம்ப காலம் முதலே வைராக்கியம் இருந்தது. இரண்டு நாட்களுக்குப்

பிறகு பாபா குடிலுக்கு அருகில் உள்ள மலர் தோட்டத்தில் சுற்றி நடந்து கொண்டிருந்தபோது நானும் அங்கு சென்றேன். பாபா பார்த்தார், திருஷ்டி கொடுத்தார், அரவணைத்தார். குழந்தாய் மும்பை பார்த்திருக்கிறாயா? மும்பை செல்கிறாயா? என்று கேட்டார். பிறகு அவரே கூறினார் சென்று சுற்றிப் பார்த்து விட்டு வா என்றார். பிருஜ் சாந்தா தாதிக்கு இந்த குழந்தை மும்பை சுற்றிப்பார்க்க வேண்டும் என்று கடிதம் எழுதினார். மறு நாள் பிருஜ் சாந்தா தாதியோடு மும்பை அனுப்பி வைத்தார். அப்போது என் வயது 12. மும்பையில் ஒரு கடிதத்தில் பாபா இந்த குழந்தைக்கு சொற் பொழிவு நடத்த கற்றுத்தந்துள்ளார், எங்கு சென்றாலும் இவர் மூலம் சொற்பொழிவாற்றச் செய்யும்படி எழுதப்பட்டிருந்தது. தாதி இக் குழந்தைக்கு சுற்றிக் காண்பிக்க வேண்டுமென நினைத்தார். எனக்கோ ஆரம்ப காலத்திலிருந்தே இங்கும் அங்கும் சுற்றிப்பார்க்க வேண்டும் என்ற ஆசை இல்லா வைராக்கிய உணர்வு இருந்தது. நான் விரும்பி ஒருபோதும் எங்கும் சென்று வந்த தில்லை. அங்கு செல், இங்கு செல் என்று தாதி கூறுகிறார், தாதி அனுப்பி வைத்தார், பாபா கூறியதால் நான் சென்று வந்தேன். தினமும் எங்காவது வகுப்பு நடத்தவும், சுற்றிப்பார்க்கவும் அனுப்பி வைத்தார்.

## சேவையில் பாபாவின் துணையின் அனுபவம்

நான் மும்பை வந்து 15-20 நாட்கள் சென்று விட்டது. பாபாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது, அதில் மும்பையில் தங்கி சேவை செய்வதற்கான கட்டளை பாபா கொடுத்திருந்தார். தாதி பிருஜ் சாந்தா அவர்கள் இந்த கடிதத்தை பத்திரமாக வைக்க வேண்டும் (ஃபிரேம்), நீ இங்கேயே இருக்க வேண்டும் என்று கூறினார். தினமும் வகுப்பு நடத்த மலாட் சென்று வந்தேன், அதற்கான புகை வண்டிக்கான பாஸ் தாதி ஏற்பாடு செய்து கொடுத்தார். பாபாவிடம் நீங்கள் என்னோடு வாருங்கள் என்று சொன்னேன், பாபா என் கூடவே இருப்பதாக அனுபவம் செய்தேன். பாபா என் கூடவே படி இறங்கினார். இரயில் பயணம் ஒரு மணி நேரம். முழு சமயமும் பாபா என் பக்கத்தில் அமர்ந்திருப்பது போன்று தோன்றியது. பாபாவோடு பேசினேன். வகுப்பு முடிந்து திரும்ப வந்த போது சகோதரி கூறினார், நீண்ட நேரம் யோகா செய்து வந்ததைப் போன்று உன் கண்கள் காணப்படுகிறது என்றார். பாபவிடம் இருந்து கடிதம் வந்தது. அதை படிப்பதற்காகவே சிந்தி மொழியை கற்றுக் கொண்டேன். கடிதத்தை படித்து எல்லோருக்கும் கூறும்படி தாதி சொன்னார், நானும் சிந்தி மொழியில் எழுதப்பட்ட கடிதத்தை படித்துக் கூறினேன்.

## பிரபுவின் வளர்ப்பில் மிகப் பெரிய சக்தி உள்ளது

மும்பையின் சீதோஷ்ணம் என் உடல் நலம் சரியில்லாமல் போகலாயிற்று. ஆஸ்துமா வந்து விட்டது. உனக்கு இந்த கடற்கரை சமீபம் இருப்பது சரியாகாது என்று டாக்டர் கூறினார். பாபா மும்பை வந்தார். அவர் முன்பாகவே அமர்ந்தேன். உடல் நலம் சரியாக உள்ளதா என்று கேட்டார். சிவராத்திரி வரக்கூடிய சமயம். பாபா சந்திரமணி தாதியோடு என்னை அமிர்தசரஸ் அனுப்பி வைத்தார். சிறிது காலம் சென்றபின் பாபா அழைத்து குழந்தாய்! உன்னை கிழக்கு மண்டலத்திற்கு அனுப்புகிறேன், அப்போது உனது காசநோய் சரியாகிவிடும் என்றார். பாபா கூறியபடி அங்கு சென்றேன், காச நோயும் சரியாகி விட்டது. பிரபுவின் வளர்ப்பில் மிகப் பெரிய சக்தி உள்ளது. **பாபாவினுடைய அப்படி ஒரு இனிமையான வளர்ப்பு கிடைத்தது அதனால் உலகத்தின் அனைத்துவித ஈர்ப்புகளும் மறந்தே போய் விட்டது. யாருக்கு சாகார பாபாவிடம் அதிகமான அன்புள்ளதோ அவர்கள் எந்த ஒரு தேகதாரியின் பெயர் - உருவத்தில் சிக்கிக் கொள்ளவே முடியாது.**

ஒரு நாள் மும்பையில் இருந்த போது தாதியின் அருகில் இருந்தேன். தாதிக்கு தலை வலி இருந்தது. தைலம் தேய்த்துக் கொண்டிருந் தேன். அப்போது தாதி ராணி, இதோ பார் பாபா என் முன் நிற்கின்றார் என்றார் தாதி ! எந்த பாபா என்று கேட்டேன். அவ்வாறு கேட்டது தாதிக்கு

சரியாகப்படவில்லை போலும், ஒரே ஒரு பாபா தான். ஒருவரில் இருவரும் இருக்கின்றனர் என்றார். நான் யோசித்தேன் எந்த நேரத்திலும் தாதிக்கு முன்பாக பாபா இருக்கின்றார். அப்படி யானால் என்னாலும் அந்த நிலையில் இருக்க முடியுமா? நானும் சாகாரத்தில் நிராகாரை காண முடியும். நானும் கூட அந்த நிலையில் இருக்க ஆரம்பித்தேன்.

ஒரு முறை தாதியோடு பாபா உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது பாபா, ஒரு சென்டரி லிருந்து செய்தி ஒன்று வந்துள்ளது, அங்கு இரண்டு பிரிவுகளாக ஆகிவிட்டது, நான் இந்த குழந்தையை அங்கே அனுப்புகிறேன், அப்போது இரண்டு குழுக்களும் ஒன்று சேர்ந்துவிடும் என்று கூறினார். பாபா என்னிடம் கூறினார், குழந்தாய் ! நீ அங்கே செல்கிறாய், பாபா உனக்கு சகயோகம் செய்வதற்கு ஒரு சகோதரியை அனுப்புவார். அவர் உணவு தயாரிப்பார், ஆடை களை சுத்தம் செய்வார். நீ முரளி வகுப்பு மட்டும் நடத்து, அவர்களை ஒன்று சேர்த்துவிட வேண்டும். அப்போது தாதி கூறினார். பாபா! இந்த சிறுமியை அந்த சச்சரவில் ஏன் ஈடுபடுத்து கிறீர்கள் என்றார். நான் அங்கு செல்லவில்லை தான், இருப்பினும் இவர் (என்னை) அங்கு சென்றால் எல்லாம் சரியாகிவிடும் என்று பாபா கூறியதை என்னால் மறக்க முடிய வில்லை.

### பாபா கேட்டார், கோபித்துக் கொண்டாயா?

மற்றொரு சமயம் பாண்டவ பவனில் அவ்யக்த பாப்தாதா வந்திருந்தார். முரளி நடந்து கொண்டிருந்து. இன்று யாரும் மேடைக்கு (ஸ்டேஜ்) வரக்கூடாது என்று அறிவிக்கப்பட்டது. எனக்கு அது சரியாக தோன்றவில்லை. நான் பாபாவிடம் கூறினேன், எல்லா சம்மந்தங்களையும் உங்களுடன் இணைத்துக் கொண்டேன். இப்பொழுது உங்களுடன் சந்திக்க முடிய வில்லை. ஒவ்வொரு முறையும் எதுவரை பாபா இருந்தாரோ அதுவரை வகுப்பில் அமர்ந்திருப் பேன். ஆனால் அன்றைய தினம் எழுந்து சென்று விட்டேன். அறைக்குச் சென்று தூங்க முயற்சி செய்தேன் ஆனால் தூக்கம் வரவில்லை. திரும்பத்திரும்ப ஏதோ ஒரு ஈர்ப்பு இருந்து கொண்டே இருந்தது. அதிகாலை இரண்டு மணிக்கு குளித்தேன் திரும்பவும் சென்று ஹாலில் பின் வரிசையில் உட்கார்ந்து விட்டேன். அப்போது மோஹினி தாதி, இராணி சகோதரியை பாபா அழைக்கிறார் என்று அறிவித்தார். ஒரு போதும் எனக்கு அழுகை வந்ததே இல்லை. ஆனால் அன்று பாபா முன் சென்ற போது கண்களில் அன்பின் முத்துக்கள் நிரம்பியது, நல்லது, கோபித்துக் கொண்டாயா? என பாபா கேட்டார். பாபாவிடமா கோபித்துக் கொண்டாய்? பாபா டோலி எடுத்துக் கொடுத்தார். நான் இரண்டு கைகளிலும் டோலி நிரப்பிக் கொண்டேன். பிறகு பாபா, குழந்தாய்! உனக்கு வதனத்திற்கு வந்து பாபாவை சந்திப்பதை கற்றுக் கொடுத்திருந்தேன். வதனத்தில் க்யூ (நீண்ட வரிசை) இருக்காது. நீ வதனம் வந்து பாபாவை சந்திக்கலாம், பாபா எப்போதும் உன் கூடவே இருக்கின்றார் - என்றார்.

பாபாவை சந்தித்த பின் இன்று முதல் ஒரு போதும் கோபமே கொள்ள மாட்டேன் என்று உறுதி பூண்டேன். நான் வதனத்தில் பாபாவுடன் உரையாடுவேன். எந்த ஒரு விசயமானாலும் ஒரு மணி நேரம் பாபாவுடன் பேசுகிறேன். இதனால் என்னுடைய ஒவ்வொரு விசயத்திற்கும் தீர்வு கிடைத்துவிடுகிறது.



# மனதை வென்றால் உலகை வெல்லலாம்

பி.கு. ஊர்மிளா, சாந்திவன்,
தமிழாக்கம் பி.கு. உமா, சென்னை

**மனதை வென்றால் உலகை வெல்லலாம்** என்று சொல்லப்படுகிறது. மனதை வெல்வது என்றால் எண்ணங்களை வசப்படுத்துவதாகும். ஆத்மாவின் மூன்று சக்திகளில் மனம் மிகவும் அதிக வேகமுடையது. எந்த பொருள் அல்லது நபரின் உடல் கவர்ச்சியில் வரும்போது அதைக் கிரகித்துக் கொள்வது மனதின் வேலை. மனம் தன்னுடைய பழைய வழக்கப்படி அந்த பொருள் அல்லது நபர் மீது வசப்படுதலை, வசப்படுதல் அல்லது ஈர்க்கப்படுதல் உடனடியாக ஏற்படுகிறது. கடைத் தெருவில் செல்லும் போது காணும் பழக் குவியலால் உடனடியாகக் கவர்ச்சிக்கப்படுதல், அல்லது அழகான பொருள் மீது மனம் வயப் படும் போது இந்த நிலைப்பாட்டிலிருந்து காப்பாற்றுவது புத்தி, எந்தக்காரியத்திற்காக வீட்டிலிருந்து புறப்பட்டோமோ அது மிகவும் அவசிய மானது என்று புத்தி புரிய வைக்கிறது. அதாவது இந்தப் பொருள் அல்லது நபரின் எண்ணத்தில் தன்னுடைய நாட்டத்தை ஈடுபடுத்துவதற்குப் பதிலாகத் தன்னுடைய இலட்சியத்தின் பக்கம் அதிகப்படுத்த வேண்டும். இந்தக் குறுக்கீடு அல்லது புரிய வைத்தல் மூலம் மனம் அங்கிருந்து அகன்று விடுகின்றது. மற்றும் இலட்சியத்தை அடைய புத்தி துணை செய்கிறது. இந்த இரண்டின் இணைப்பினால் ஏற்படும் செயலானது சம்ஸ்கார ரூபத்தில் ஒன்றுடன் ஒன்று போரிட்டுக் கொள்கின்றன மற்றும் எதிர்காலத்தில் இந்த மாதிரி மனநிலை மீண்டும் உருவாகுவதிலிருந்தோ அல்லது மனம் ஏதாவது நிலைத்து விடுவதிலிருந்து காப்பாற்றும் உதவியாளர் ஆகின்றது.

மனம் ஆத்மாவின் ஒரு சக்தி ஆகும். ஆத்மாவை நாம் (லைட்) ஒளி மற்றும் (மைட்) சக்தி என்கிறோம். ஆத்மாவின் ரூபம் மிகவும் சூட்சுமமானது. ஆனால் எவ்வளவு சூட்சுமமாக இருந்தாலும் இவ்வளவு பெரிய ஸ்தூல உடலையே கட்டுப்படுத்தும் செயலைச் செய்கின்றது. இந்த சக்தியின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம்.

## மனம் ஒரு சிறுவனைப் போன்றது:

மனதின் செயல்முறைகளை ஒரு சிறுவனுடன் ஒப்பிடலாம். ஒவ்வொரு சிறுவனிடமும் கூட சக்தி இருக்கிறது. இதெல்லாம் பள்ளிப் படிப்பில் ஈடுபடுத்தப்படுகிறது. ஆனால் சிற்சில சமயங்களில் படிப்பின் பந்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வீட்டு வேலைகளும் கொடுக்காத போது பெற்றோரும் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போது சிறுவர்கள் தங்கள் சக்தியை ஏதாவது ஒரு காரியத்தில் ஈடுபடும் வழியைத் தேடுவார்கள். தோட்டத்தில் உள்ள பூக்களையோ அல்லது இலைகளையோ பறித்துக் கொண்டிருப் பார்கள், சுவற்றில் கோடுகளைக் கிறுக்கிக் கொண்டிருப்பார்கள், மணல் அல்லது கற்களைக் கைகளால் துளாவிக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் சக்தி இருக்கின்றது. அதை எங்காவது ஈடுபடுத்துவார்கள். மனதிற்கும் இதே நிலை தான். மனமும் தனது சக்தியை எங்காவது ஈடுபடுத்தும் அல்லவா? அர்த்தமுள்ள காரியங்களில் ஈடுபடுத்தாமல் அர்த்தமற்ற காரியங்களில் ஈடுபடுத்தும்.

## தன்னிடமே பேசுங்கள்

ஆத்மார்த்தமாக மனதோடு பேசுவது மிகவும் மகத்துவமானது. மனதிடம் பேசுவது என்றால் உங்களிடமே பேசுவதாகும். எப்படி சிறுவர்களிடம் அடிக்கடி தலையிட்டு என்ன செய்து கொண்டி

ருக்கிறாய்? இங்கு ஏன் நிற்கிறாய் என்று கேட்போமோ, அதுபோல மனதிடமும் கேளுங்கள். இந்த நேரம் எங்கு இருக்கின்றாய்? என்ன செய்து கொண்டிருக்கின்றாய், என்ன நோக்கத்தில் இருக்கிறாய்? இங்கு இருப்பதால் என்ன இலாபம்? என்று மனதிடம் கேளுங்கள். சிறுவர்களின் செயலில் நம் கவனம் செல்லும் போது அவர்களின் விளையாட்டுத்தனம் நிறுத்தப்படுகிறது. அதுபோல மனதின் பக்கம் கவனம் கொடுப்பதால் மனதின் அலைதல், துறுதுறுப்புத்தன்மை மற்றும் வீணான சிந்தனை களின் குழப்பம் இல்லாமல் போகிறது.

எங்கள் பையன் சொல்வதைக் கேட்பதில்லை, ஊர் சுற்றுபவனாக ஆகிவிட்டான் என்று பெற்றோர் சொல்லும் போது கேட்பவர்களின் மனதில் ஒரேயடியாக என்ன எண்ணம் வரும்? ஒருவேளை இவர்கள் சிறுவயதில் சரியாகக் கவனிக்காமல் அதிகச் செல்லம் கொடுத்து கண்டு கொள்ளாமல் இருந்து விட்டார்கள் என்று நினைக்க மாட்டார்களா? இதேபோல் தான் மனிதரிடமும் ஈடுபாடு ஏற்பட்டு என் மனம் அலைகிறது என்பார்கள். நிலையாக இருப்ப தில்லை, எங்கு ஈடுபடுத்த விரும்புகிறேனோ அங்கு ஈடுபடுவதில்லை என்பார். அவசியம் அவரும் மனதின் செயல்களில் கவனம் கொடுக் காமல், மனதிடம் பேசாமல், மனதின் செயல் முறை களைப்பற்றிக் கேட்காமல், அதனுடைய பாதையைக் கண்டு கொள்ளாமல், மனம் போன வழியில் விட்டுவிட்டிருக்கலாம். ஏன் சென்றாய், எங்கு சென்றாய், எதற்காகச் சென்றாய், என்றெல்லாம் கேட்டிருக்க மாட்டார். மற்றவரைப் பற்றி ஏன் செய்தாய், என்ன செய்தாய், என்று கேட்பவர்கள் தன் மனதின் செயல்களைப் பற்றிக் கேள்விகள் கேட்பதில்லை. அதைத் தெரிந்து கொள்வதற்கோ, மாற்றுவதற்கோ, தடுத்து நிறுத்து வதற்கோ முயற்சியும் செய்வ தில்லை. இவ்வளவு சொல்லியும் என்ன செய்வது மனம் அலைகிறதே என்று கடைசியில் சொல்வார்கள். அப்படிச் சொல்வதால் மனம் அலைவதிலிருந்து தடுக்கப்படலாம். நீங்கள் ஆத்மா வினுடையவரா தலால் உங்கள் மனம் அலைகிறது என்றால் உங்களுடைய மகத்துவம் தான் என்ன? நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள், இதைப் பற்றிப் பேசிப் புரிய வைத்து வீணான செயல் முறைகளை நிறுத்த வேண்டாமா?

## மனதிடம் பேசுங்கள், புதிய செயல்கள் செய்யுங்கள்:

எப்பொழுதெல்லாம் மனதில் ஒரே ஒரு வீணான சிந்தனை மீண்டும் மீண்டும் தலை தூக்குகிறதோ விரும்பினாலும் விட்டுப் போவ தில்லையோ நீங்கள் ஒரு வழியைப் பின்பற்றுங் கள். என்ன வழி? ஏதாவது ஒரு மனிதர் உங்களிடம் மீண்டும் மீண்டும் ஒரே ஒரு விஷயத்தைக் சொன்னால் நீங்கள் என்ன சொல்வீர்கள். ஐயா, நீங்கள் சொல்ல வேண்டி யதைச் சொல்லி விட்டீர்கள். நானும் கேட்டு விட்டேன். பிறகு ஏன் மீண்டும் மீண்டும் மீண்டும் சொல்லி நேரத்தை வீணாக்கு கின்றீர்கள்?

இதேபோல் உங்கள் மனதிற்கும் சொல்லுங்கள், உன்னிடம் வேறு எதுவும் இல்லையா? அதே வீணான பழைய விஷயங்களையே மீண்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறாய். என் மனமே, உன்னுடைய அதே விஷயங்களைக் கேட்டு கேட்டு அலுத்துப் போய் விட்டது. என்னுடைய அலுப்பு தீருமாறு எனக்கு ஏதாவது நல்ல, புது விஷயங்களைச் சொல் பார்க்கலாம் என்று இம்மாதிரி உங்களிடமே நீங்கள் பேசி மனதின் வீணான ஓட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

## கெட்டதின் வேர் உள்ளுக்குள் உள்ளது:

அனேக சமயங்களில் வெளி விஷயங்களைப் பற்றிக் குறை கூறு கிறோம். இவரிடம் இவ்வளவு எதிர்மறை விஷயங்கள் இருப்பதன் காரணமாக விரும்பாவிட்டாலும் மனதில் எதிர்மறை விஷயங்களின் விளைவு ஏற்படுகிறது. இது

கூடத் தவறான புரிந்து கொள்ளல் தான். வெளி உலகில் எவ்வளவு தான் அலை பாயக்கூடிய விஷயங்கள் இருந்தாலும் உள்ளிருக்கும் சம்ஸ்காரம் அதைப் பிடித்துக் கொள்ளாமல், அதனால் கவர்ச்சிக்கப்படாமல் இருந்தால் மற்றவர்க்கு என்ன நடந்தாலும் நடக்கா விட்டாலும் நமக்கு ஒன்று போலவே இருக்கும். ஒரு பசுமாடு சாலையில் போகிறது என்று வைத்துக் கொள்வோம். அதைப்பார்க்கும் மூவரில் ஒருவர் மனதில் இந்த எண்ணம் வருகிறது, இந்தப் பசு மாட்டைப் பூஜிக்க வேண்டும், 33 கோடி தேவி தேவதைகள் இதில் வசிக்கின்றனர். இதை வணங்க வேண்டும். மற்றொருவர் நினைக்கின்றார் இது நல்ல கறவை மாடு, இதை இதனுடைய சொந்தக்காரனிட மிருந்து வாங்கினால் தினந்தோறும் 10 லிட்டர் பால் கிடைக்கும். மூன்றாவது மனிதர் நினைப்பு வேறாக இருந்தது. இது நல்ல கொழுத்த மாடு, யாரும் அறியாமல் திருடிச் சென்று வெட்டினால் நிறைய மாமிசம் கிடைக்கும்.

பாருங்கள், பசு என்னமோ ஒன்றே ஒன்று தான் ஆனாலும் மூவரின் எண்ணங்களும் சதோ, ரஜோ, தமோ குணமாக இருப்பது ஏன்? ஏனெனில் மூவரின் உள்ளத்திலும் அப்படிப்பட்ட சம்ஸ்காரங்கள் நிரம்பி இருந்தன. எப்படிப்பட்ட சம்ஸ்காரங்கள் உள்ளுக்குள் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட சிந்தனைகள் தான் வெளி உலகப் பொருள்களின் மீது ஏற்படுகிறது. உள்ளுக்குள் பெட்ரோல் இல்லா விட்டால், வெளியில் என்ன நெருப்பு பிடித்து எரிந்தாலும் நமக்கென்ன? நம்மை எதுவும் கெடுத்துவிடாது. எப்பொழுது வீணாகும் என்றால் உள்ளே எரிக்கக்கூடிய பொருள் இருக்கும்போது. இந்தப் பொருளின் கவர்ச்சியால் வெளியில் உள்ள நெருப்பு உள்ளே பிரவேசமாகிவிடுகிறது. அதாவது மாற்றம் செய்ய வேண்டியது வெளிப்புறத்தில் அல்ல, வெளி உலக மாற்றம் அவசியமில்லை. உள்ளுக்குள் தான் மாற்றம் ஏற்படவேண்டும். உள்ளுக்குள் இருக்கும் கெட்ட சம்ஸ்காரங்கள் அழிக்கப்பட வேண்டும். உள்ளுக்குள் அழிக்கப்பட்டால் வெளியிலிருந்து தானாகவே பிரபாவம் இல்லாமல் போய்விடும். உள்ளுக்குள் இருக்கும் கெட்ட சமஸ்காரங்களை முடித்து விடுவதற்கு யோகத்தின் ஆழமான அனுபவம் தேவை. இதை இறைவனுடைய மகாவாக்கியத்தின் ஜுவாலா ரூப் யோகம் அல்லது விதை நிலை என்று சொல்லப்படுகிறது.

### வீணானது என்பது உறிஞ்சப்பட்ட சக்கை போன்றது:

ஸ்தூல உலகில் உபயோகமற்ற பொருட்களை எரித்தோ அல்லது வேறு வகையிலோ அழித்து விடுவார்கள். அது போல் சூட்சும உலகில் அதாவது மனதின் வீணான சிந்தனைகளை அழிப்பது தான் நல்லது. உலகில் சாறு (ஜுஸ்) நிரம்பிய பொருட்கள் இருக்கின்றன. உதாரணத் திற்குக் கரும்பை எடுத்துக் கொள்ளுங்கள், கரும்பை வாயில் வைத்துக் கடிக்கும் போது தான் அதன் சாறு வெளிப்படுகிறது. மிகவும் இனிமையாக இருக்கின்றது, மகிழ்ச்சியைத் தரு கின்றது. ஆனால் ஒரே ஒரு முறை சாறு வெளிப் பட்டதும் சக்கை தான் மிஞ்சுகிறது. அதை வாயிலிருந்து துப்பி விடுகிறீர்கள். இதே போன்று கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் ஏற்படும் போது அதன் சாரத்தை ஒரு முறை தான் கிரகிக்க வேண்டும். எப்படி கரும்பின் சக்கையை மீண்டும் வாயில் வைப்பதால் அதிலிருந்து சாறு வெளிப்படுவதில்லையோ, மேலும் சக்கையின் பகுதிகள் வாயில் புண்ணையும் உண்டாக்கும் எனவே வீணானது என்பதை உணர்ந்து அதை வீசி விடுவதாலேயே நன்மை உண்டாகும். அதேபோல் முடிந்து போன வஷயங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு முன்னேறுவது நன்மை பயக்கும்.

ஒரு மனிதர் ரயிலில் பயணம் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். டிக்கட் பரிசோதகர் டிக்கட்டைக் காட்டும்படி கேட்கிறார். பண்பட்ட பழக்கம் உடையவர் என்றால் டிக்கட்டுடன்

தன்னுடைய அடையாள அட்டையும் காண்பிக்க வேண்டும். ஆனால் இந்த மனிதர் அடையாள அட்டையின் நகலை காண்பித்தார். பரிசோதகர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை அதிக நேரத்திற்குப் பிறகு டிக்கட்டை சரிபார்த்து விட்டு அவர் மேலே சென்று விட்டார். இந்த நிகழ்ச்சி யின் சாரம் என்னவென்றால் எந்த ஒரு நபரும் அசல் சான்றிதழுடன் தான் பயணம் செய்ய வேண்டும். தவிர நகலை வைத்துக் கொண்டு அல்ல என்பதாகும்.

ஆனால் இந்த நிகழ்ச்சியின் ஆழ்ந்த அர்த்தத்தை பற்றி சொல்லாமல் பரிசோதகர் இதைச் சொன்னார், நான் இதைச் சொன்னேன் என்று அந்தச் சிந்தனையில் இருப்பது கரும்புச் சக்கையை சுவைப்பது போல் ஆகும். அதில் எந்த சாறும் கிடைக்கப்போவதில்லை. அதற்குப் பதிலாக நடந்த நிகழ்ச்சியிலிருந்து ஒரு படிப்பினையை பெற்று முற்றுப்புள்ளி வைப்ப தாலேயே நன்மை ஏற்படும்.

சில சமயம் நாம் நகைத்து நகைக்கக் (சிரிப்பு) கூடிய செயல்களைச் செய்கிறோம் அல்லது கேட்கிறோம். ஆனால் சிரிப்பு ஒருமுறை தான் வருகிறது. இரண்டாவது முறை அதே விஷயத்தை சொல்வதாலோ கேட்பதாலோ குறைவான சிரிப்பே வருகிறது. மீண்டும் மீண்டும் அது ஏற்படும் பொழுது அதைக் கேட்பது கூடப் பிடிப்பது கிடையாது. எனவே சக்கையிலிருந்து மீண்டும் மீண்டும் சாறு வெளிப்படாதது போல் விஷயங்களின் ரசனையும் ஒரிரு முறை கேட்பதால் தான் வரும். மீண்டும் மீண்டும் கேட்பதால் பலன் எதுவும் இல்லை.

### அவ்வப்பொழுது இரண்டாம் முறையின் அவசியம்:

மேலே சொன்ன விஷயங்களின் சாதாரண நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்லப் பட்டது. ஆனால் சில மாணவர்கள் படிப்பையும் இரண்டு முறை படிக்கிறார்கள். தேர்வுக்காக இரண்டு முறை படிப்பது அவசியம். அடிக்கடி நாம் பிரம்மா பாபா, மாதேஷ்வரி மற்றும் மூத்த சகோதர சகோதரி களின் வாழ்க்கை அனுபவங்களை மீணடும் மீண்டும் அலசுகின்றோம். மற்ற மகான் ஆத்மாக் களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை அடிக்கடி கேட்கிறோம். எவ்வளவு முறை படிக்கிறோமோ அவ்வளவு புது சக்தி கிடைக்கும். இந்த விஷயங்களையெல்லாம் ஆத்மாவிற்கான சாப்பாடு, தண்ணீர் மற்றும் காற்றுபோல் ஆகும். நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் மிகவும் அவசியமான பகுதியாக உள்ள இவற்றை பலமுறை தெரிந்து கொள்ள வேண்டும்.

## இப்படி ஆக வேண்டும்

கடவுள் எவ்வளவோ செய்கின்றார், எனினும் செய்கின்றார் என்ற உணர்விலிருந்து விலகியும், அப்பாற்பட்டவராகவும் இருக்கின்றார். அவர் இதைப்பற்றி எண்ணுவதில்லை. ஆனால் அவர் எண்ணுகின்றார் என்று நம் நினைக்கிறோம். இப்படி அவர் விசித்திரமான, தனிப்பட்ட குணமுடையவராக இருக்கின்றார்.

நாம் கடவுள் ஆக முடியாது. ஏனெனில் அவரது நாடகப் பாத்திரம் விந்தை யானதாக இருக்கின்றது. இருந்தாலும் நாம் அவரது குழந்தைகள் என்ற முறையில், அவராக அல்ல, அவரைப்போல ஆக முடியும்.

ஆதலால் இப்போது இதற்காக முயற்சி செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.




# வெளி நாட்டில் ஈஸ்வரிய சேவையின் துவக்கம்

**(டிசம்பர் மாத ஞானமிர்த இதழ் - பி.கே. ரமேஷ் ஷா, மும்பை அவர்களின் கட்டுரையின் தமிழாக்கம்) - பி.கு. சுந்தர்ராஜன்**

சென்ற கட்டுரையில் ஷீல் இந்திரா தாதி, ரோஸி சகோதரி, டாக்டர் நிர்மலா சகோதரி, பி.கு. உஷா, ஜெகதீஷ் பாய் மற்றும் நான் ஆகிய ஆறு பேர் அடங்கிய பிரதிநிதி குழுவை பாபா அவர்கள் வெளி நாட்டு சேவைக்காக தேர்வு செய்தது பற்றி எழுதியிருந்தேன். இந்தக் குழுவினரை வழி அனுப்புவதற்காக சுயம் அவ்யக்த பாப்தாதாவே பாண்டவ பவனுக்கு வருகை தந்திருந்தார். அவரிடமிருந்து கீழ்கண்ட மூன்று வரதானங்களைப் பெற்று உலக (விஸ்வ) சேவைக்காகப் புறப்பட்டோம்:

1, குழந்தைகள் உங்களுக்காக பாபா அனைத்தையும் தயார் செய்து வைத்துள்ளார். அறையில் வெளிச்சத்திற்காக லைட் சுவிட்சை போட எந்த அளவு முயற்சி தேவையோ அதை விடவும் குறைவான உழைப்பே சேவையில் உங்களுக்கு இருக்கும்.

2. குழந்தைகள் நீங்கள் தேவதைகள் (வழங்கும் வள்ளல்கள்) ஏற்பவர்கள் அல்ல. நீங்கள் உலகத்திற்கு ஈஸ்வரிய ஞானம் மற்றும் யோகத்தைப் பற்றி கற்பிக்கச் செல்கின்றீர்கள்.

3. ஒரு சேவை மையத்தை கிழக்கிலும், மற்றொரு மையத்தை மேற்கிலும் ஸ்தாபனை செய்ய வேண்டும்.

1971 ஜுலை 15 அன்று நாங்கள் ஐந்து பிரதிநிதிகள் புறப்பட்டோம். லௌகீக வேலை இருந்ததால் உஷா அவர்கள் சில நாட்கள் கழித்து குழுவோடு இணைந்து கொண்டார். கிரீஸ் நாட்டின் ஏதென்ஸில் விமானம் சென்றடைந்தது. அந்நாட்டின் பழைய வரலாற்றைப் பற்றி அரை-முக்கால் மணி நேரம் விவாதித்தோம். பிறகு பிரேஸில் போய் சேர்ந்தோம். அங்கே அந்த விமானத்தின் ஸ்தாபனமே நாங்கள் தங்குவதற்கு ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். நாங்கள் எங்களுடனே கொண்டு வந்த உணவை சாப்பிட்டோம். சேவைக் காக வெளியே புறப்பட்டோம். ஒரு வருடத்திற்கு முன்பு பிரேஸிலில் தான் பல நாடுகள் கலந்து கொண்ட யோகா சம்மந்தப்பட்ட கூட்டம் நடந்தது. இதன் காரணத்தால் நாங்கள் அங்குள்ள புகழ் பெற்ற வேதாந்திகளோடு சந்தித்தோம். அவர்களுக்கு பாபாவின் செய்தியையும், ஈஸ்வரிய தர்ம சம்மந்தமான புத்தகங்களையும் கொடுத்தோம்.

அடுத்த நாள் பிற்பகல் நாங்கள் ஐந்து பிரதிநிதிகள் லண்டன் சென்றடைந்தோம். சில சகோதர-சகோதரிகள் எங்களை அழைத்துச் செல்ல வந்திருந்தனர். சகோதரர் முரளி மற்றும் ரஜினி சகோதரி (ஜெயந்தி சகோதரியின் தாய்-தந்தை) அவர்களின் வீடு போய் சேர்ந்தோம். இரவில் லண்டன் சேவையைப் பற்றி விவாதித்தோம் அங்குள்ள மும்பையைச் சேர்ந்த சகோதரர் சதீஷ் மோகன் மற்றும் பிற சகோதர- சகோதரி களுடன் சந்திப்பு ஏற்பட்டது. சோர்வடையாமல் நாங்கள் ஐந்து பிரதிநிதிகளும் ஐந்து வித நிகழ்ச்சிகளை நடத்தினோம். படக்காட்சிகளுக் கான சித்திரங்களை ஏற்கனவே அனுப்பி வைத்திருந்தோம். அதை வைத்தும் கூட சேவை செய்தோம். லைஸ்டரில் இரண்டு நாட்கள் தங்கினோம், ஒருநாள் மான் செஸ்டர் சென்றோம்.

இரண்டு இடங்களிலுமே இந்துக்கள் கோவில் களில் நிறைய சேவைகள் நடைபெற்றன. பாரதத் திலிருந்து வந்து அங்கிருக்கும் சகோதர- சகோதரி களோடு 15 நாட்கள் தங்கி சேவைகள் செய்தோம். அவர்களிடம் நிறைய ஊக்கம் உற்சாகம் நிறைந்திருந்தது.

எங்களுடன் ஷீல் இந்திரா தாதி, சந்தேஷி இருந்தார். நாங்கள் பாபாவிற்கு தாங்கள் ஒரு சேவை மையம் கீழை நாட்டிலும், மற்றொன்றை மேலை நாட்டிலும் திறக்க வேண்டுமென கூறியிருந்தீர்கள். எங்களுக்கு மேற்கில் லண்டனில் சேவை மையம் ஆரம்பிக்க விருப்பம் உள்ளது என செய்தி அனுப்பினோம். எங்களில் மூன்று பிரதிநிதிகள் லண்டனில் தங்கவும், இரண்டு பிரதிகள் கிழக்கு நாடுகளுக்கு செல்வோம், சில நாட்கள் கழித்து உஷா அவர்கள் வந்து விடுவார்கள். இவ்வாறாக நான்கு பிரதிநிதி கள் மூலம் லண்டன் சேவையில் நான்கு பேரும் ஈடுபடுவோம். இந்த செய்தியையும் பாபாவுக்கு அனுப்பி வைத்தோம். அவ்யக்த பாப்தாதா இந்த யோசனைக்கும் ஒப்புதல் அளித்தார். மேலும் எனக்கும் டாக்டர் நிர்மலா சகோதரி அவர் களுக்கும் அமெரிக்காவில் நடை பெறவிருந்த ஒரு மாநாட்டில் பங்கேற்க அனுமதி அளித்தார்.

நானும் டாக்டர் நிர்மலா சகோதரி அவர் களும் 15 நாட்கள் லண்டனில் சேவை முடித்து விட்டு அமெரிக்கா புறப்பட்டோம். அமெரிக்கா வில் எனது லௌகீக சகோதரரின் மகள் பீட்டர் ஸ்பர்க் என்னுமிடத்திலும், நியூயார்க்கில் ஒரு நெருங்கிய நண்பரான மகேந்திரன் என்பவரும் இருந்தனர். ரோஸி சகோதரியின் உறவினர் நியூயார்க்கில் இருந்தார். எங்களுக்கு நியூயார்க் நண்பர் மூலம் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. நாங்கள் அவருடன் நியூயார்க் நகரத்தை சுற்றிப் பார்த்தோம். அடுத்த நாள் ஞாயிறன்று காலை எனது நண்பர் மகேந்திரனின் காரில் முன் கூறப்பட்ட அந்த மாநாட்டிற்குச் சென்றோம். திரும்ப வருவதற்கான முன்னேற் பாட்டை செய்யவில்லை எனவே இதை பாபாவிடம் ஒப்படைத்து விட்டோம்.

மாநாட்டிற்கு படவிளக்க கண்காட்சிக் குண்டான சித்திரங்களை எடுத்து சென்றிருந் தோம். அங்கே ஒரு ஹாலில் கண்காட்சி சித்திரங் களை வைத்து சேவை செய்தோம். அமெரிக்கா விலுள்ள புகழ் பெற்ற யோகிகளுடைய அறிமுகம் ஏற்பட்டது. நாங்கள் பாரதத்திலிருந்து புறப்பட்டபோதே வெளிநாட்டில் சேவை எப்படி நடக்குமோ என்ற கேள்வி எழுந்தது. பாப் தாதாவோ சமயத்தில் எல்லா கேள்விகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று கூறியிருந்தது நினைவுக்கு வந்தது.

மாநாட்டின் துவக்க விழா ஞாயிறன்று நடந்து முடிந்தது. திங்களன்று காலை அந்த ரிட்ரீட் சேவை மையத்தின் பார்க்கில் தனித்தனி குழுவினர் அமர்ந்து ஆன்மீக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. நானும் சென்று ஒரு குழுவில் அமர்ந்து கொண்டேன். நிர்மலா சகோதரி வேறொரு குழுவில் அமர்ந்து கொண்டார். என்னுடைய குழுவில் பாரதத்தின் ஒரு பிரபலமான வேதாந்தியின் தத்துவம் சம்மந்தப்பட்ட சொற்பொழிவின் ஒலி நாடா ஓடிக் கொண்டிருந்தது அனைவரும் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தனர். நானும் கூட நடை முறையில் அங்கீகாரம் பெற்றவைகளின் ஆதாரத்திலான அந்த சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தேன். முக்கால் மணி நேரம் ஓடிய ஒலி நாடா முடிந்துவிட்டது. அனைவரும் அந்த தத்துவ ஞானியின் சொற்பொழிவை புகழ்ந்தனர். அப்போது எனக்கு பாபாவிடமிருந்து ஒரு டச்சிங் கிடைத்தது- இங்கு சிவாச்சாரியாரின் மகிமை பாடப்பட வேண்டும் சங்கராச்சாரியாரினுடையதை அல்ல என்று. நான் அந்த 40-50 சகோதர- சகோதரிகளிடம் நீங்கள் அந்த சாஸ்திரியின் தத்துவ ஞானத்தை புகழ்ந்தீர்கள், அதில் படித்ததை மீண்டும் படித்ததை மட்டுமே கேட்டீர்கள் அதில் எந்த ஒரு வாத-விவாதமும்

இல்லை என்று கூறினேன். எல்லோரும் என்னை திரும்பிப்பார்த்தனர். நான் உங்களுடைய அரை அல்லது முக்கால் மணி நேரத்தை எடுத்துக் கொள்ள முடியுமா? என்று கேட்டேன். அவர்கள் ஏற்றுக் கொண்டனர். பிறகு நாங்கள் அவ்யக்த பாப்தாதாவின் தூண்டு தல் மூலம் அந்த வேதாந்தியின் கருத்து களுக்கு மாறான பாபாவினுடைய ஞானத்தின் கருத்துக் களை தெளிவாக எடுத்துரைத்தோம்.

பிரம்மா குமாரிகளின் இரண்டு பிரதிநிதி கள் வந்துள்ளனர், அவர்களுடைய கருத்துக்கள் புதியவையாக இருக்கின்றன, அவர்கள் பரமாத்மா வால் அளிக்கப்பட்ட உண்மையான ஞானத்தை கூறுகின்றனர் என்ற இந்த செய்தி எல்லா பிரதிநிதிகளிடமும் போய் சேர்ந்தது. இதன் மூலம் எங்களுடைய கண் காட்சிக்கு நிறைய பேர் வர ஆரம்பித்தனர், எங்களுடன் சந்திக்கவும் செய்தனர். நாங்களும் அவர்களுடன் நம் வீட்டிலுள்ளவர்கள் போலவே சாதாரண முறை யில் சிவபாபாவின் ஞானத்தைப் பற்றி உரையாடி னோம்.

அங்கு சமையல் அறை இருந்தது, நாங்களே உணவு சமைத்து சாப்பிட்டோம். ஈஸ்வரிய சேவையில் அது நம்முடைய கருத்தரங்கம் போன்றது என்ற மகிழ்ச்சியில் திளைத்து விட்டோம். இவ்வாறு நமது சேவை நடந்தது. இதன் விளைவாக எல்லா பிரதிநிதி களுடன் எங்கள் தொடர்பு அதிகரித்தது. குழுவில் ஒரு குஜராத்தை சேர்ந்த சகோதரர் சேனுபாய் மோதி என்பவருடன் பேசும்போது ஈஸ்வரிய சேவையின் பொருட்டு தங்குவதற்கு ஒரு இடம் தேவை எனக்கூறினோம். அவர் தனது வீட்டு விலாசத்தைக் கொடுத்து வந்து சந்திக்குமாறு கூறினார். மற்றொரு சகோதரி யோகா கில்ட் ஆஃப் அமெரிக்கா என்ற பெயரில் ஒரு யோகப் பயிற்சி நிலையம் நடத்தி வந்தார். அவரும் தனது நிலையத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். பாரதத்திலிருந்து வந்திருந்த சன்னியாசி- மகான் களையும் சந்தித்தோம். பிறகுதான் நாங்கள் 170 மைல் தூரத்திலுள்ள உறவினர் வீட்டிற்குச் செல்வதற்கான எந்த ஒரு ஏற்பாடும் செய்ய வில்லை என்ற எண்ணம் வந்தது. கூட்டத் தொடர் அடுத்த திங்களன்று நிறைவு பெறுவதாக இருந்தது. அன்று காலை 9 மணியளவில் ஒரு சகோதரர் அங்கும் இங்கும் சுற்றி கொண்டிருந்து விட்டு எங்களிடம் வந்தார். அவர் ரமேஷ் பாய் நீங்கள் என்னை மறந்து விட்டீர்கள், உங்கள் கடிதம் கிடைத்தது, நீங்கள் இந்த மாநாட்டிற்கு வந்துள்ளீர்கள், உங்களை சந்திப்பதற்காக நியூயார்க்கிலிருந்து வந்துள்ளேன் என்று கூறினார்.

அந்த சகோதரர் மும்பையில் பாபாவின் கண்காட்சியை பார்த்திருக்கிறார். அவருக்கு தெரிந்துள்ளது நம்முடைய பிரதிநிதிகள் அமெரிக்கா வருவார்கள் என்று, அந்த சமயம் அவர் விலாசத்தைக் கூறி எழுதி வைத்துக் கொள்ள கூறியிருந்தார். அந்த சகோதரர் திங்கள் கிழமை எங்களுடன் தங்கி சாப்பிட்டார். திங்கள் இரவு திரும்ப செல்ல இருந்தார், ஆனால் நாங்கள் அவரை நிறுத்தி வைத்தோம். அந்த சகோதரர் ஒரு கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தார். கல்லூரிக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்து விடுமுறை பெற்றார். திங்களன்று அதிகாலையிலேயே எழுந்து அவருடன் காரில் நியூயார்க் நண்பருடைய வீட்டிற்கு செல்ல புறப்பட்டோம். முதலில் இந்திய தூதரகத்திற்குச் சென்றோம். ஏனெனில் அவர் களோடு கடித மூலம் முன்பாக தொடர்பு கொண்டிருந்தோம். அவர்களிடம் நாங்கள் நியூயார்க்கில் இராஜயோகம் பற்றிய கண்காட்சி வைக்க விருக்கிறோம், இதற்கான இடமும், நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் கோரிக்கை வைத்திருந்தோம். தூதரகத்தினர் கண்காட்சிக்கோ, தங்குவதற்கோ ஏற்பாடு செய்ய முடியவில்லையென பதில் அனுப்பியிருந்தனர். நேரில் சென்றாவது வேண்டுகோள் விடுக்க எண்ணினோம், ஆனால் அதற்கும் அவர்கள்

தங்கள் இயலாமையை கூறிவிட்டனர். அதன் பிறகு யோகா பயிற்சி கூடம் நடத்தும் சகோதரி யின் இடத்திற்குச் சென்றோம். அந்த ஸ்டுடியோ நன்றாக இருந்தது. இராஜயோக கண்காட்சி எத்தனை நாட்கள் நடக்கும் என சகோதரி கேட்டார். சிவபாபாவை நினைவில் வைத்து 11 நாட்கள் வைப்போம் என்றோம். கண்காட்சி காண வருபவர்களிடம் எவ்வளவு கட்டணம் வாங்கு வீர்கள் என்ற அவர் கேள்விக்கு நாங்கள் கொடுப் பதற்காகத்தான் வந்துள்ளோம், பெறுவதற்காக அல்ல. ஆகவே பைசா (கட்டணம்) வாங்க மாட்டோம் என்றோம். மற்றபடி வாடகையாக ஏதும் தரவேண்டுமானால் தருவதற்கு தயார் என்றோம்.

பாபாவின் என்ன மாய மந்திரம் வேலை செய்யப்போகிறது என்பதை பார்ப்போம் என்றிருந்தோம். அந்த சகோதரி உங்களுக்கு எத்தனை நாள் தேவையோ அத்தனை நாள் இலவசமாகவே ஹாலை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். நாங்கள் இருவரும் வியப்படைந்தோம். நாங்கள் புறப்பட்டு வந்தபோது எல்லாம் தயார் செய்யப்பட்டு விட்டது என்று சத்தியமானதைத் தான் கூறியிருக்கிறார் என்பது நிதர்சனமாகி விட்டது. 11 நாட்களுக்கான வாடகை 3300 டாலர் இருக்கும். எங்களிடம் அவ்வளவு பணம் இல்லை. இது பாபாவின் ஆச்சரியத்திற்குரிய செயலால்தான் இலவசமாக கிடைத்துள்ளது. சகோதரி அவருடைய உணவு தயாரிக்க தேவையான பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் உள்ள அறையை (பேன்ட்ரி) காண்பித்தார். நீங்கள் மாநாட்டில் நீங்களே உணவு தயாரித்ததைப் பார்த்தேன், என்னுடைய இந்த அறையில் நீங்கள் உணவு தயாரித்துக் கொள்ளலாம், காஃபி, டீ வேண்டுமென்றாலும் தயார் செய்து கொள்ளலாம் என்று கூறினார். இங்கு நடக்கவிருந்த பயிற்சிக்கு 11 நாட்களுக்கு நிறுத்தி வைத்துள்ளேன் என்றார். நாங்கள் நாளை செவ்வாய் கிழமை பீட்டர்ஸ் பார்க் செல்கிறோம், ஒரு வாரத்திற்குப் பிறகு வருவோம் என்று அவரிடம் கூறினோம். அவரோ நான் சாவியை உங்களிடம் தந்து விடுகிறேன், எத்தனை நாட்கள் தங்க வேண்டு மானாலும் தங்கிக் கொள்ளலாம், இந்த ஸ்டுடியோவை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொன்னார்.

அங்கிருந்து சீனுபாய் மோதி அவர்களிடம் சென்றோம், அவருடைய யுகல் அமெரிக்கா நாகரீகம் உள்ளவர். சகோதரர் தமது வீட்டையும் காட்டினார், மேலும் கூறினார். அவர்கள் 3 மாதம் சிகாகோ செல்லப்போவதாகவும் அவ்வமயம் வீடு காலியாக இருப்பதால் 3 மாத காலத்திற்கு அங்கு தங்கலாம் என்றார். வாடகைப்பற்றி கேட்ட போது தன் மனைவியிடம் கலந்து ஆலோசித்த பிறகு கூறினார். வீடு என்னவோ 3 மாதம் காலி யாக இருக்கத்தான் போகிறது, எனவே அந்த காலத்திற்கான, மின்சாரம் மற்றும் தொலைபேசி கட்டணங்களை மட்டும் செலுத்திவிடும்படி கூறினார். பிறகு வீட்டில் குளிர்சாதனப் பெட்டியில் ஆட்டா, பால், சப்ஜி முதலானவை உள்ளன, இவற்றை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். நான் நிர்மல் சகோதரியைப் பார்த்தேன். அவர், ரமேஷ் பாய் ! சகோதரர் அனுமதிக்கிறார் ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார் இதற்கு முன் இந்த பொருட்கள் எல்லாம் வெளியில் எங்கு கிடைக்கு மென தெரிந்திருக்கவில்லை. இங்கேயே வீட்டில் உணவுக்கான எல்லா சாமான்களுமே கிடைத்து விட்டது. பாபா முன்னரே கூறியிருந்தார். ஒவ்வொரு பொருளுக்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்று. நாங்கள் அந்த சகோதரருடைய உதவியை ஏற்றுக் கொண்டோம். சாவியைப் பெற்றுக் கொண்டு கூறினோம் பீட்டர்ஸ் பார்க் சென்று திரும்பிய பிறகு இங்கு தங்குகிறோம் என்று கூறிவிட்டோம். அன்றிரவு சகோதரர் மகேந்திரா பாய் அவர்களிடம் இரண்டு சாவிகளையும் காண்பித்து இவை தங்குவதற்காக இலவசமாக (வாடகை ஏதுமின்றி) கிடைத்தது என்றோம் அப்போது அவரும் ஈஸ்வரிய உதவியைப் பற்றிய எண்ணத்தில் ஆழ்ந்து

விட்டார். அடுத்த நாள் நாங்கள் இருவரும் பீட்டர்ஸ் பர்க் சென்றோம். அங்கு எனது லௌகீக சகோதரர் மகன்கள் எங்களை அழைத்துச் செல்ல வந்திருந்தார்கள். மூத்தவர் பீட்டர்ஸ் பர்க் பல்கலை கழகத்திலும் இளையவர் காரனேகி மேலன் பல்கலை கழகத்திலும் படித்துக் கொண்டிருந்தனர். இருவருமே தங்களது பல்கலைக்கழக வளாகத்திலும் நம்முடைய நிகழ்ச்சியை வைத்தனர். வானொலியில் நேர் காணலும் நடந்தது.

கார்நேகிமெலன் பல்கலைக் கழகத் தில் தத்துவ ஞான இலாகாவின் தலைவரிடமிருந்து அழைப்பு வந்தது. சொற்பொழிவாற்ற வேண்டிய தன் தலைப்பு **பரமாத்மாவின் அவதாரம்.** நான் சார்லஸ் டார்வின் கொள்கையைப் பற்றிய வாதத்தில் அதில் நிறைய குறைபாடுகள் இருப்ப தாகக் கூறினேன். அப்போது அப்பல்கலைக் கழக அறிவியல் இலாகா தலைவர், ரமேஷ் பாய் நீங்கள் ஆன்மீக உலகத்தின் பிரதிநிதி, உங்களுக்கு அறிவியல் பற்றி என்ன தெரியும் என்றார். நான் அந்த மாதிரி எந்த ஒரு விசயமும் கிடையாது, விஞ்ஞானமும் ஞானமும் இரட்டை சகோதரர்கள். எனவே தாங்கள் இரண்டு மணி நேரம் ஒதுக்கித் தந்தீர்களெனில் டார்வின் பரிணாம வளர்ச்சியின் கொள்கையிலுள்ள குறை பாடுகளை (தவறுகளை) விளக்குவேன் என்றேன். அவர் குழுவினருடன் கலந்து இரண்டு மணி நேரம் ஒதுக்கிக் கொடுத்தார். பரிணாம வளர்ச்சி என்பது வளர்ச்சி அடைய அடைய மனித வாழ்க்கை வரை அடைந்து விட்டது என்ற கருத்து தவறானது. நம்முடைய மூதாதையர்கள் குரங்கு அல்ல தேவதைகள். குழுவினர் நாம் கூறிய விசயத்திற்கு கரவொலி எழுப்பி ஆமோதித்தனர். ஒரு சகோதரி வேறு ஒரு இலாகாவின் தலைவி கூறினார் இன்று முதன் முறையாக விஞ்ஞானம் மற்றும் தர்மத்தினிடையிலான போட்டியில் விஞ்ஞானம் தோற்று விட்டது என்றார். இவ்வாறாக வெளி நாட்டு சேவையில் புத்திசாலிகளுக்கு அவர்களுடைய ஏற்றுக் கொண்டிருந்த உண்மையில்லாதவற்றை கூறி ஆன்மீகத் தின் பால் கவர முடியும் என்ற அனுபவம் ஏற்பட்டது. இதன் பிறகு நாங்கள் நியூயார்க் திரும்பி வந்தோம். மகேந்திரா பாய் மற்றும் அவரது யுகல் சீனு பாய் வீட்டிலிருந்து சாமான்களை கொண்டு வந்தனர். மாலையில் லண்டனிலிருந்து சகோதரர் ஜெகதீஷ் அவர்கள் மற்றும் ரோஸி சகோதரி வந்தனர். லண்டனில் ஷீலு இந்திரா தாதி மற்றும் உஷா அவர்களும் வந்து விட்டனர். இவ்வாறு அமெரிக்காவில் முறைப்படி சேவை ஆரம்பமாயிற்று. (தொடரும்)

## கவிதை

மனம் என்னும் கண்ணாடி
குணம் என்னும் பூங்கொத்து
உன்னிடத்தில் இருந்தால்
தெய்வீக வாழ்வு வரும்
ஞானம் என்னும் முத்துக்கள்

பிராமணின் சொத்துக்கள்
சொர்க்கத்தை உருவாக்கும்
பிரம்மாவின் வம்சங்கள்
நற்பண்புகள் என்கின்ற
மலராய் நீ மனம் வீசு

அன்பு என்னும் மொழியினையே
அனைவருக்கும் கற்றுக் கொடு
உலகிற்கே ஒளிவிளக்கு
ஆத்மா என்னும் திருவிளக்கு
அறிந்து நீ செயல் புரிந்தால்
அனைவருக்கும் நீ அகல் விளக்கு



# மவுண்ட் அபுவின் அற்புதங்கள்

*கி. புஷ்பம், முனைவர், பட்ட ஆய்வாளர்,*
*சமூகவியல் துறை,*
*காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகம், காந்தி கிராமம்*

மவுண்ட் அபு ஆன்மாவின் வடிவமாய், ஆன்மாவைத் தவிர வேறு எதையும் சிந்திக்க வழியில்லை. ஆன்மீகப் பயணம் அற்புதமாய் எனக்குள் ஆன்மாவின் சுடராய், சிறுகல்லும், புல்தரையும் உணர்த்திய ஆன்மாவின் நினைவு கள். எப்படித் தொடர்ந்தது இந்த ஆன்மீகப் பயணம்? எண்ணற்றத் தடைகளைத் தாண்டி எனக்குள் தடங்களாய் மாறிய பயணம். எவரிட மும் காணவில்லை ஏற்றத் தாழ்வை, எண்ணற்ற வண்ணங்களிலும் அனைவரையும் சமமான பார்வையோடு பார்த்தனர் பிரம்மா குமாரிகள். எதிர்பார்க்கவில்லை இப்படியொரு மாறுபட்ட உலகத்தை.

பிரம்மா குமாரிகளின் உடைகளைப் போன்றே அவர்களின் உள்ளங்களையும் கண்டேன் தூய்மையாகவே. ஒருவருக்கொருவர் கட்டுப்படுத்தாத சுதந்திரமான பரவசமுள்ள அமைதியான நிலையையும் அங்கேதான் கண்டேன்.

கடுமையான குளிரிலும் கண்கள் மூட வில்லை. அதிகாலையிலேயே ஆரவாரத்துடன் அனைவரும் பணி தொடங்கிய நிலை எக் காரணமும் கொண்டு சுருங்கக் காணவில்லை சுதந்திரமாகவே செயல்பட்டனர்.

சிறுகல்லும், செடியும் ஆன்மாவின் வடிவமாய் ஆன்மாவை உணர்த்திய ஞாபகங்கள் என் முன்னே.

உள்ளங்களின் உணர்வு உன்னதமான உடை சிதறவிடவில்லை சிந்தனைகளை சிற்ப மாக்கியது எனக்குள் ஆன்மாவின் நிலையை சிரிக்கவில்லை சிந்தித்ததை செயல்படுத்த சிரமமும் படவில்லை. உணர்த்தியது உண்மை யான ஆன்மாவின் நிலை.

வெளியூர் பயணமாய் தொடர்ந்த நாங்கள் ஆன்மீக நிலையை உணர முடிந்தது எங்களின் அனுபவங்களுக்கு அற்புதமான வாய்ப்பாய் அமைந்தது.

நிதானமான நிலை நீண்ட நேர உழைப்பு உற்சாகத்துடன் கூடிய அமைதி எச்சூழலிலும் அவசரப்படவில்லை, கோபப்படவில்லை பிரகாசித்தனர் பிரம்மாகுமாரிகளாய்....

அதுபோலவே நீண்ட நேரம் சுறுசுறுப்பாய் செயல்பட்டனர் எவ ரொருவர் உந்துதலும் இல்லாமல் அமைதி யுடன் கூடிய உற்சாகத் துடன் மட்டுமே இருந்தனர். எனக்குள்ளும் இத்தகைய ஏக்கம். நம்மால் இப்படி இருக்க முடிய வில்லையே என்பதுதான் அந்த ஏக்கம். மவுண்ட் அபு அங்கு உள்ளவர்களுக்கு மட்டு மல்ல எங்களுக்கும் அனுபவமாய் கிடைத்தது.

மவுண்ட் அபுவில் நாங்கள் சந்தித்தது ஒரு புதிய உலகத்தை. அங்கு இருந்த ஒவ்வொரு நொடியிலும் நாங்கள் தேவலோக நிலையை உணர்ந்தோம். ஏன் ஒவ்வொருவரும் உணர முடியாத இந்த ஆன்மீக நிலையை உலக அமைதிக்காக போராட்டங்கள் பல போர்கள் பல- ஏன்? ஏன் உணரவில்லை உன்னதமான ஆன்மாவை உணர்ந்தேன் அற்புதமான ஆன்மாவின் நிலையை பிரம்மா குமாரிகளின் சகோதர, சகோதரிகளின் உதவியுடன்.... உலக அமைதிக்காக போராட்டங்கள் பல போர்கள்- பல எதற்கு? உணர்ந்தேன் வெண்மையுடன் கூடிய

அமைதியே போதுமென்று....

கடவுளை சென்றடைய எவருடைய அனுமதியும் தேவையில்லை. உங்களின் உண்மையான உள்ளத்தின் இசைவு இருந்தால் போதும், தடைகளையும் தகர்த்தெறிந்து தங்கமான உலகத்தைக் காண வழி வகுக்கலாம் வாருங்கள். எனக்கு அற்புதமாய் ஆன அந்தப்பயணம் ஆன்மீகப் பயணமாய் ஆனது. அந்தப் பயணம் அறிவை அறியவைத்து, ஆன்மாவை உணரவைத்து, அற்புத நிலையைக் காட்டியது. அந்த மவுண்ட் அபு பயணம் தான். மவுண்ட் அபுவுக்கு அற்புதப்பயணமாய் உங்களையும் வரவேற்று உங்களுக்காவும் காத்திருக்கின்றது.

உன்னை உணர
உண்மையை உணர
உயர்வை அடைய
கலியுகம் அழித்து, கருயுகம் இழந்து
புதுயுகம் படைத்து, பொன்னுலகம் காண்க
பிரம்மா குமாரிகள் அவதாரத்தில்.....

மவுண்ட் அபுவின் அற்புதம் ஆன்மீகமாய் நாம் ஒவ்வொருவருக்காகவும் காத்திருக்கின்றது.

## சுகவீனத்தைப் புரிந்து கொள்ளல்

சுகவீனம் பற்றிய ஆன்மீகக் கண்ணோட்டம் எத்தகையதாக இருக்கிறது? இது உங்களுடைய கடந்தகால கர்மத்தின் பலன் என்று புரிந்து கொள்ள வேண்டும். இது கர்மத்தின் சட்டம். இந்த சட்டம் என்ன சொல்கிறது என்றால், உங்களுடைய இன்றைய நிலை எப்படிப்பட்டதாக இருக்கிறதோ, அது நீங்கள் நேற்று செய்த கர்மத்தின் பலன் என்பதாகும். இந்த கர்மத்தை சிறிது காலத்திற்கு முன்பு செய்திருக்கலாம் அல்லது வெகு நாட்களுக்கு முன்னரே செய்திருக்கலாம். இதற்கு நான் தான் பொறுப்பு என்பதை ஒப்புக் கொண்டு விட்டால், உங்களுடைய மனம் கடவுளின் நினைவில் நிலைத்திருக்க முடியும். இதன் மூலம் பெரிதளவிலான சுகவீனத்தையும் எதிர்கொள்ளும் சக்தியுடைய பலம் உங்களுக்குக் கிடைத்துவிடும். அதாவது மலை போலானாலும், கடுகு போல் ஆகிவிடும். இவ்வாறு சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால், கடுகும், மலைபோல எதிர்மறையான பாதிப்பை உண்டாக்கக் கூடும்.

கர்மத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஆன்மீக ரீதியாகப் புரிந்து கொண்டு செய்யும் போது, உங்களுடைய எதிர்காலம் ஆரோக்கியமுள்ளதாக இருக்கும். அதாவது நற்கர்மம் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதாக இருக்கிறது. உதாரணமாக, உங்களுடைய உடல், மனம் மற்றும் பொருள் ஆகியவற்றை மனித குல நன்மைக்கான சேவையில் பயன்படுத்துவீர்களானால், ஊக்கம், உற்சாகம் மற்றும் மகிழ்ச்சியைத் தரும் சூட்சும சக்தி உங்களிடம் வந்து சேரும். ஆனால் உங்களுடைய உடமைகள் பயனற்றவகையில் பயன்படுத்தப்படும்போது, எதிர்மறை விளைவையே உண்டாக்கும் என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

# ''பொறாமையின் அக்னியில் எரிந்து கொண்டிருக்கிறது உலகம்''

தமிழாக்கம் - பி.கு. நாத், காஞ்சிபுரம்




பொறாமை அனேகருடைய வாழ்க்கையை அழித்திருந்திருக்கும், பொறாமையின் அக்னியில் கோடிக்கணக்கான மனிதர்களின் சுகம் சாந்தி எரிந்து சாம்பலாகியிருக்கும், பொறாமை எத்தனையோ மனிதர்களை முன்னேற்றத்தின் மார்க்கத்திலிருந்து விலக்கியிருந்திருக்கும், பொறாமை எத்தனை சுமங்கல்யத்தை அழித் திருந்திருக்கும், எத்தனை வீடுகளை நிர்மூல மாக்கியிருக்கும், மேலும் எத்தனை பேர் களுடைய சாதனைகளை அழித்திருக்கும். இந்த பொறாமையின் அக்னி காம அக்னியின் சூட்சும அம்சமே தான். எந்த ஆத்மாக்கள் காம அக்னியை சீதளம் ஆக்குகின்றனவோ அவர் களுடைய இந்த பொறாமையின் அக்னியும் சாந்தமாகி விடுகிறது. யோகிகளுக்கோ தன்னுடைய புத்தியில் இதனுடைய வெப்பத்தை நுழைய விடவே கூடாது.

எப்படி காட்டில் மூங்கில் மரங்கள் ஒன்றுக்கொன்று உரசி எரிந்து அழிந்து விடு கின்றன. அதே போலவே அனேக மனிதர்கள் பொறாமை வசமாகி அவர்களுக்குள் மோதி அழிந்து விடுகிறார்கள். பொறாமை தர்மங்களின் மற்றும் இயக்கங்களின் பலத்தை அழித்திருக் கிறது. நீங்கள் எந்த மருத்துவமனை, கல்லூரி, வியாபார துறை மேல் கவனம் செலுத்தினாலும், சமூக சீர்திருத்த இயக்கங்களைப் பார்த்தாலும் பொறாமையின் அக்னியின் வெப்பம் உங்களுக்கு இந்த அனைத்து இடங்களிலும் தென்படும். நீங்கள் பார்த்திருக்கலாம் அல்லது கேட்டிருக் கலாம் சாதாரண மனிதர்கள் இரண்டு, நான்கு பேர் அவர்களுக்குள் விரைவாகவே இணைந்து விடுவார்கள் ஆனால் ஒரே நகரத்தில் வசிக்கும் இரண்டு வித்வான்கள் ஒருபொழுதும் இணைவது கிடையாது. தீமைகள் ஒன்றாகச் சேர்ந்து விடுகின்றன, மேலும் நல்லவைகளை பிரித்து விடுகிறது என்ற இது பொறாமையின் பரிசு தான். யாருக்கு சத்தியமான மார்க்கத்தில் நிலைத்திருக்க வேண்டுமோ அவர்களுக்கு பொறாமையை அவசியம் எதிர்நோக்கத் தான் வேண்டியதிருக்கும். ஏனென்றால் ஒவ்வொரு மனிதனும் மரியாதையை விரும்புகிறார், முன்னேற்றத்தை விரும்புகிறார், வாய்ப்பை விரும்புகிறார் மேலும் மற்றவர்களின் தகுதி களுக்கு சவாலும் கொடுக்கிறார். மேலும் அகம்பாவத்தோடு தான் மற்றவர்களுடைய தகுதியை ஏற்று கொள்ளவும் செய்கிறார். எனவே ஒரு வேளை உங்கள் மேல் மற்றவர்கள் பொறாமை கொள்கிறார்கள் என்றால் நீங்கள் நிலைகுலைந்து போகாமல் அதை கம்பீரமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். குழுவில் சமமானவர்களின் சபையில் பொறாமை இருப்பது ஒன்றும் புதிய விஷயம் இல்லை. பொறாமையோ இருவருவரின் இடையேயும் வந்து விடுகிறது, சகோதரன்- சகோதரனில், சகோதரன்-சகோதரிக் கிடையில் மற்றும் சகோதரிகளுக்கிடையிலும் வந்து விடுகிறது. எனவே நீங்கள் இதை சகஜ உணர் வோடு எடுத்துக் கொள்ளுங்கள். கிடைத் திருக்கும் வாய்ப்புக்களை நழுவ விடாமல் முழு லாபத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை நீங்கள் மற்றவர்கள் உங்கள் மேல் வைத்திருக்கும் பொறாமையைக் கண்டு சோர்ந்து விட்டீர்கள் என்றால் உங்களுடைய வளர்ச்சி நின்று விடும். ஆனால் நீங்கள் மேலே முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். மேலும் பொறாமைப் படுபவர்கள் பார்த்துக் கொண்டே இருந்து விடுவார்கள்.

ஒரு மனிதன் மற்றொருவரின் முன்னேற்றத்தைப் பார்த்து பொறாமை வசமாகி மனதிற்குள்ளே எரிந்து கொண்டே இருந்தார். திடீரென்று ஏகாந்தத்தில் அவருடைய விவேக சக்தி விழித்தெழுந்தது. பின்பு அவர் இந்த மாதிரி யோசிக்க ஆரம்பித்தார் - என்னுடைய பொறாமையை யாராவது தெரிந்தும் இருக்கிறார் களா? என்ன அந்த நபருக்கு நான் வைத் திருக்கும் பொறாமையைக் கண்டு அனுதாபம் இருக்கிறதா? அவருக்கு பதில் கிடைக்கவில்லை. என்னுடைய பொறாமை அவரை தடுத்து நிறுத்த முடியுமா என்ன? பதில் கிடைக்கவில்லை. எனவே ஹே! பைத்திய மனிதா நீ ஏன் பொறா மையின் வெப்பத்தில் எரிந்து கொண்டிருக்கிறாய்? அவருக்கும் ஒருவேளை நீ ஏதாவது செய்ய வேண்டும் என்றால் உடனே செய், மற்றவர் களை தடுப்பதினால் அவரும் நிற்கமாட்டார். நீயும் முன்னேறிச் செல்ல மாட்டாய். எனவே நீ உன்னை முன்னேற்று, இந்த பொறாமையின் அக்னியிலோ உன்னுடைய உயர்ந்த சிந்தனையின் நிலை எரிந்து சாம்பலாகி விடும். அப்படி இந்த விதமாக அவருடைய விவேகம் விழித்தெழுந்தது. பின்பு அவருடைய முன்னேற்றக் கதவுகள் நிரந்தரமாக திறந்து விட்டன.

யார் தகுதியானவரோ அவர் முன்னேறு வதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது என்பது ஈஸ்வரிய மகாவாக்கியம் ஆகும். ஆம், அனைவருக்கும் முன்னேறுவதற்கான மார்க்கம் வேறு வேறாகும்.

புகழ் தனக்கு மட்டும் தான் கிடைக்க வேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும் நினைக்கிறார். மேலும் பெயர் பெற்ற மனிதன் ஒருவர் எப்பொழுது இன்னொருவருக்கு பெயர் கிடைப்பதை பார்க்கிறாரோ, அப்பொழுது அவருடைய குஷி அழிந்து விடுகிறது. ஒரு நகரத்தில் ஒரு செல்வந்தன் கம்பீரமான வீட்டைக் கட்டினார், அவருடைய குஷி அவருடைய முகத்திலிருந்து பொங்கி, பொங்கி வெளிப் படத் தொடங்கியது. அனைவரும் அவரைப் புகழ்ந்து பேசினார்கள். மேலும் அவரும் தன்னுடைய பாக்கியத்தைப் பார்த்து பார்த்து பூரித்துப் போனார். ஆனால் ஒரு வருடத்திற்குப் பிறகே அருகிலேயே இன்னொருவர் அதே மாதிரி வீட்டைக்கட்டி விட்டார். இப்பொழுது இந்த செல்வந்தனின் நிலைமை மிக யோசிக்க வேண்டிய தாக ஆகிவிட்டது. அவருடைய முகம் வாடிப் போய் விட்டது, அவர் பக்கத்து வீட்டுக்காரரை நிந்தனை செய்ய ஆரம்பித்தார். மேலும் அவருக்கு தன் வீட்டில் வசிப்பதின் சுகம் சுவையற்றதாக ஆகி விட்டது. இது தான் பொறாமையின் அதிசயமாகும். பொறாமை வசமாகி மனிதன் தன்னுடைய பிராப்தியின் ஆனந்தத் தையும் அடைய முடியாமல் இருக்கிறான். அனை வருமோ முன்னேறிச் சென்று கொண்டு தான் இருக்கிறார்கள், ஆனால் எந்த மனிதன் மற்றவர்களின் முன்னேற்றத்தை பார்க்க விரும்ப வில்லையோ, மிகவும் சுயநலமானவராக இருப்பாரோ அவருடைய முழு சுகமும் பொறாமைக்கு பலியாகி விடுகிறது. ஆனால் எந்த மனிதனுடைய உள்ளம் விசாலமானதாக இருக்கிறதோ, அனை வருடைய சுகத்தையும் தன்னுடைய சுகமாக மற்றும் அனைவரின் முன்னேற்றத்தை தன்னுடைய முன்னேற்றமாக நினைக்கிறாரோ அவருக்கு அனைவருடன் வாழ்ந்தும் மிகுந்த வெற்றி கிடைத்து விடுகிறது. ஒருவேளை ஒரு நபர் சொற்பொழிவின் மூலமாக புகழை சம்பாதிக்கிறார் என்றால் நீங்கள் சுய முன்னேற்றத்தின் மூலமாக அதை அனுபவம் செய்யுங்கள். உங்களுக்கு புகழ் தாமதமாக கிடைக்கலாம். ஆனால் இந்தப் புகழ் மிகவும் சுகம் நிறைந்ததாகவும் நிரந்தரமானதாகவும் இருக்கும். சொற்பொழிவு ஆகியவற்றின் மூலமாக அல்லது மற்ற ஸ்தூல சம்பவங்களினால் கிடைக் கின்ற புகழ் உயர்ந்த நிலையின்மையின் காரணமாக விரைவிலேயே அகன்று விடுவதைப் பார்த்திருக்கிறோம். நீங்களே உங்களுடைய மார்க்கத்தை உருவாக்குங்கள். யார் வாழ்க்கையில்

முன்னேறிச் சென்றிருக்கிறார்களோ அவர்கள் கண்டிப்பாக ஏதாவது ஒரு துறையில் கடுமையாக உழைத்திருப்பார்கள், சகித்துக் கொண்டிருந் திருப்பார்கள், மற்றவர்களின் நல்ல ஆலோசனை களைக் கேட்டிருந்திருப்பார்கள் என்பதை ஒருபொழுதும் மறக்காதீர்கள். ஆனால் ஒரு வேளை நீங்கள் உழைப்பின்றி மற்றவர்களை விட முன்னேறிச் செல்ல விரும்புகிறீர்கள் என்றால் அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. சமநிலையில் உள்ள இரண்டு நபர்கள் உயர்ந்த நண்பர் களாக இருக்க வேண்டும், அவர்களில் ஒருவர் இன்னொருவரின் தகுதிகளின் மேல் மரியாதை நிறைந்த பாவனை இருக்க வேண்டும், அவர் இன்னொருவர் முன்னேறிச் செல்வதை பார்த்து உற்சாகம் கொடுக்க வேண்டும், இது தான் நமக்கு அழகாகும். நாம் அந்த மாதிரி ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும், அதில் அனைவருக்கும் அவரவர்களின் தகுதிக்கேற்றபடி முன்னேறிச் செல்வதற்கான துறை சுலபமானதாக இருக்க வேண்டும். எங்கு யாரும், யாருடைய காலையும் பின்னால் இருந்து இழுக்கக் கூடாது. அந்த மாதிரியான சமுதாயத்தில் அனைவரும் மகானாக இருக்க வேண்டும், ஒவ்வொருவரின் மனநிலையும் மகான் மற்றும் குணம் மற்றும் தகுதிகளிலும் உயர்ந்த நிலை உள்ளவராக இருக்க வேண்டும். இது உலகில் அதிசயக் காரியம் செய்ய முடியும்.

யார் மற்றவர்களின் காலை பின்னால் இருந்து இழுக்கிறார்களோ அவருடைய காலை இழுப்பதற்கு அவருக்குப் பின்னாலேயே இன்னொருவர் நின்று கொண்டிருப்பார். யார் மற்றவர்கள் மேல் பொறாமை வைக்கிறாரோ அவர் மேல் மற்றவர்கள் பொறாமை வைப்பதற்கு குறைவு இருக்காது. ஆனால் யார் கீழே விழுப வரை தூக்கி விடுகிறாரோ யார் உதவி செய்து மற்றவர்களையும் தகுதியானவராக ஆக்கு கிறாரோ, அவர் மகான் ஆகிவிடுகிறார். பொறாமைவசமாகி மனிதன் மற்றவர்களின் மீது புகார் செய்கிறார், மற்றவர்களை கீழே தள்ள விரும்புகிறார். பொறாமை நிரம்பிய சூழ்நிலை, புகார்களின் சூழ்நிலை ஒரு சமுதாயத்தின் வேரை பலமற்றதாக ஆக்குகிறது. எனவே எப்படி நாம் நம் மேல் யாரும் பொறாமைப் படக்கூடாது என்று விரும்பு கிறோமோ அதே போல் நாமும் மற்றவர்கள் மேல் வைத்திருக்கும் பொறாமையிலிருந்து விடுபட வேண்டும்.

யோக சாதனாவின் மார்க்கத்தில் மகான் லட்சியம் வைத்திருப்பவர்களுக்கு இந்த தீய குணத்திலிருந்து தூரமாக இருக்க வேண்டும். எந்த ஆனந்தம் யோகா மூலமாக ஈஸ்வரிய சந்திப்பில் இருக்கிறதோ அந்த ஆனந்தம் சேவை மூலமாக கிடைத்த புகழில் எங்கே இருக்கிறது? ஆனால் புகழ் சில நேரம் மனிதனை பிச்சைக் காரன் ஆக்கிவிடுகிறது. மேலும் அவர் அதற்கான வாய்ப்புகளின் தேடுதலிலேயே ஈடுபட்டு விடுகிறார். உண்மையான யோகி களுக்கு இந்த கானல் நீருக்காக இங்கு அங்கும் அலையக்கூடாது. யோகப்பயிற்சி தான் வளர்ச்சிக்கான அந்த மாதிரியான மார்க்கம் அதில் நம்மை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. எனவே அதிகாரி ஆகி வாய்ப்பை பிராப்தி செய்யுங்கள். யாசித்து அல்ல. ஒரு வேளை உங்களுக்கு காத்திருக்க வேண்டிய தானாலும் பரவாயில்லை ஆனால் அந்த காத்திருத்தலின் பலன் (பழம்) மிக சுவையானதாக இருக்கும்.

மற்றவர்கள் முன்னேறிச் சென்று கொண்டிருக் கிறார் என்றால் இதில் நமக்கு பொறாமை ஏற்பட வேண்டாம். அனை வரும் அவரவர்களின் பாக்கியத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், புண்ணி யத்தின் அல்லது பக்தியின் பலனை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாமும் முன்னேறிச் செல்வதற்கு தகுதியானவர் ஆக வேண்டும், புண்ணிய காரியம் செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு உதவுபவர்களாகவும் ஆக வேண்டும். நமக்கோ யாரும் வாய்ப்பே கொடுப்ப தில்லை, நம்மை யாரும் முன்னேறச் செய்வதே யில்லை என்று நினைத்து சோர்வடைய வேண்டாம். முன்னேறிச் செல்பவர்களை இந்த

உலகின் எந்த சக்தியும் நிறுத்த முடியாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

எப்பொழுது நமது பரிவாரத்தில் ஒரு புதிய நபர் வருகிறார், அவர் உயர்ந்த கல்வி பெற்றவர், அனைத்து விதங்களிலும் நிரம்பியவர், சேவைகளில் ஊக்கம், உற்சாகம் வைக்கிறார், அவர் சேவையில் முன்னேறிச் செல்கிறார் என்றால் பழையவர்களுக்கு அவர் மேல் பொறாமை ஏற்பட ஆரம்பிக்கிறது, ஆனால் பெரியவர்களுக்கு தன்னுடை யதை தியாகம் செய்து சிறியவர்கள் முன்னேறிச் செல்வதில் சகயோகம் கொடுக்க வேண்டும். இதன் மூல மாகத்தான் இந்த ஈஸ்வரிய காரியம் அதிவேகத் தில் முன்னேறிச் செல்லும்.

அப்படி ஹே! உலகிற்கு குளுமையை பிராப்தி செய்விக்கக்கூடியவ ர்களே, எங்காவது நீங்களே பொறாமையின் அக்னியில் எரிந்து கொண்டிருக்க வில்லையே? ஒருவேளை நீங்களும் இந்த அக்னியால் வேட்டையாடப் பட்டு விட்டீர்கள் என்றால் நீங்கள் இதற்கு முன்பு எப்படி இருந்தீர்களோ அப்படியே இருந்து விடுவீர்கள். சிவசக்தி பாண்டவ சேனையாக ஒரு பொழுதும் ஆக முடியாது. இந்த சுபாவத்தை விட்டு விடுங்கள், நீங்களோ உலகிற்கு நன்மை செய்ய வேண்டும், உலகிற்கு நன்மை செய்பவர் எப்படி பிறர் மீது பொறாமை கொள்ள முடியும். நீங்களோ மிக உயர்ந்த மலை உச்சிக்கு ஏற வேண்டும். ஒருவேளை நீங்கள் பொறாமையால் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் இந்த மகான் லட்சியத்தை எப்படி அடை வீர்கள், விழித் தெழுங்கள், இந்த கலியுக பாதிப்பிலிருந்து விழித் தெழுங்கள். பொறாமையின் காரணமாக பெரிய காரியம் செய்வது கூட கீழ்தர மாகும். உங்களுடைய மனதில் ஏதாவது ஒரு மூலையில் இந்த அக்னி எரிந்து கொண்டிருக்கிறது என்றால் அதை ஞான அமிர்தத்தின் துளிகளினால் அமைதியாக்குங்கள். நீங்களும் நிற்காதீர்கள், மேலும் வேறு யாரையும் நிறுத்தாதீர்கள். ஒரு வேளை நீங்கள் பொறாமைப்படுவதிலிருந்து விடுபட வில்லை என்றால் ஈஸ்வரிய சந்திப்பின் உண்மை யான சுகத்தை எப்படி அடைவீர்கள்.

**கேள்வி - பதில்**

**கேள்வி: சிவராத்திரி அன்று பக்தர்கள் கண் விழிக்கிறார்கள், விரதம் இருக்கிறார்கள், சிவன் மேல் அரளிப்பூ அர்ப்பணம் செய்கிறார்கள். ஒவ்வொரு சிவராத்திரியிலும் உண்மையிலேயே சிவன் தன்னுடைய பக்தர்களை சந்திப்பதற்காக வருகிறாரா?**

பதில் - ஆம் இது உண்மை தான். ஒவ்வொரு சிவராத்திரி அன்றும் தன்னுடைய பக்தர்களை சந்திக்க வருகிறார். எந்த பக்தர்கள் உண்மையான உள்ளத்தோடு அவரை ஆராதனை செய்கிறார்களோ அந்த பக்தர்கள் தான் அவருடைய தரிசனத்தை அடைகிறார்கள். எனவே உண்மையான பக்தர்களுக்கும் அவருடைய தரிசனம் கிடைக்கிறது.

ஆனால் யார் அஞ்ஞான தூக்கத்திலிருந்து விழித்து விட்டார்களோ, யார் பக்தனிலிருந்து அவருடைய குழந்தையாக ஆகிவிட்டார்களோ, யார் அவரை தெரிந்து கொண்டார்களோ மற்றும் தன்னுடைய வாழ்க்கையை தூய்மையாக ஆக்கிவிட்டார்களோ அவர்களை சந்திப்பதற்காக ஒவ்வொரு சிவராத்திரி அன்றும் வருகிறார். யார் தூய்மை என்ற விரதத்தை நிரந்தரமாக கடைபிடிக்கிறார்களோ அவர்களே அவருக்கு மிகப்பிரியமான குழந்தைகள் ஆவார்கள், அவர்களையே ஒவ்வொரு நாளும் அமிர்தவேளை நேரத்தில் சந்திக்கிறார்.

இங்கு கண்விழித்திருப்பது . . . என்றால் அஞ்ஞானத்திலிருந்து விழித்தெழுவது. எப்பொழுதும் கண்விழித்தல் என்றால் எப்பொழுதும் நினைவு சொரூபாக இருப்பது, விரதம் எடுப்பது என்றால் உறுதியான எண்ணம் வைப்பது மற்றும் அரளி மலரைத் தூவுவது என்றால் சிவ பரமாத்மாவிடம் தன்னுடைய தீயவைகளை அர்ப்பணம் செய்வது.




# உன்னத உலகம்

**(சொர்க்கத்தின் நினைவுகளில் சில...)**

பி.கு. தீபநாதன், திண்டிவனம்

உன்னத உலகம் உனக்காய் இருக்கும் உன் நிலை தொடர்ந்தால் அது நிலைக்கும்
நினைத்தவுடன் நடந்திடுமே நித்தம் வெற்றி கிடைத்திடும், அங்கு
அன்பு இன்றி யாருமில்லை, அமைதியின்றி ஏதுமில்லை
ஆண்டவரின் துணையுமில்லை, ஆரோக்கிய குறைவுமில்லை
ஆதவனின் சூடுமில்லை, ஆசை அங்கு அரவுமில்லை,
இறை நினைவே அங்கில்லை, இரக்கம் கொள்ள வாய்ப்பில்லை
ஈகை அங்கு தேவையில்லை, ஈசன் புகழும் அங்கு இருப்பதில்லை
உண்மை தவிர வேறில்லை, உயர்ந்தவர் தவிர யாருமில்லை
உழைப்பு அங்கு இருப்பதில்லை, உற்சாகம் இன்றி யாருமில்லை
ஊக்கம் தவிர வேறில்லை, ஊழ்வினையின் தாக்கமும் இல்லை
எண்ணமும் தோல்வி கொள்வதில்லை, எங்கும், எதற்கும் கவலையில்லை
எண்ணெ ஊற்ற தேவையில்லை, இயந்திர கோளாறு ஏதுமில்லை, அதைப்போல்
எங்கும் செல்லும் விமானம் வேறெங்கும் இருப்பதில்லை
ஏக்கம் கொள்ள தேவையில்லை, ஏமாற்றமே அங்கு இருப்பதில்லை
ஐயம் அங்கு இருப்பதில்லை, ஐவிகாரங்களுடன் இருப்போர் யாருமில்லை
ஒரு இராஜ்யம் தவிர வேறில்லை, ஒற்றுமை குலைய வாய்ப்பில்லை
ஓர்மொழி தவிர வேறில்லை, ஓர் குலம் தவிர ஏதுமில்லை
காமம், களவு அங்கில்லை, காலனின் பயத்தில் யாருமில்லை
புலால் உணவு அங்கில்லை, புலியும் பசுவை கொல்வதில்லை
மகிழ்ச்சி தவிர வேறில்லை, மாண்பு குன்றி யாருமில்லை
முகமலர்ச்சிக்கு குறைவே இல்லை, முக்திக்கு யாரும் அலைவதில்லை
விளக்கொளியும் தேவையில்லை, வேள்விகள் யாரும் செய்வதில்லை
வீணான எண்ணமும் அங்கு இல்லை, வேசிகள் யாரும் இருப்பதில்லை
வேதனைகள் அங்கில்லை, வேண்டுதல் யாரும் செய்வதில்லை
சட்ட திட்டங்கள் ஏதுமில்லை, சாட்சி சொல்லும் வேலை இல்லை
தரமில்லா பொருளில்லை, தண்டனை என்ற பேச்சுக்கே இடமில்லை

# வாழ்க்கைப் பாடம்

**பி.கு. செண்பகராஜ், மதுரை**



வாழ்க்கை ஒரு பாடம், அதை படிக்கத் தெரியாதவர் யாரும் இருக்க முடியாது. கடினமான படிப்பை கஷ்டப்பட்டு படிக்கின்றனர். உலகிலேயே மிகவும் பெரிய படிப்பு என்றால் வாழ்க்கைப் பாடம் தான். ஆனால் அதை படிக்காதவர் யாரும் இருக்க முடியாது. சிலருக்கு நான் வாழ்க்கைப் பாடத்தை படிக்கின்றேன் என்ற உணர்வு இல்லாமல் வேண்டுமானால் இருக்கலாமே ஒழிய அனைவரும் கட்டாயம் படித்துக் கொண்டிருக்கும் பாடமிது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொரு பாடம் இருக்கும். இதற்கென்று எந்த வரையரையும் இல்லை. இந்தப் பாடம் மிகவும் விஸ்தாரமான பாடம். படித்து கைதேர்ந்தவர்கள் பெரிய மேடைதனில் ஏறி சவாலாக குறிப்பிட்ட நேரமே பேச முடியும். ஆனால் படிக்காதவர்கள் கூட தனது வாழ்க்கையைப்பற்றி பேசச்சொன்னால் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் பேசுவார். இதற்கு எந்த படிப்பறிவும் தேவையில்லை, பட்டறிவு ஒன்றே போதுமானது.

**படித்ததினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு,**
**பாடம் படிக்காத மேதைகளும் பாரிலுண்டு.**

வாழ்க்கையில் அனைத்தும் பாடம் தான், நல்லவையும். தீயவையும் பாடம் தான். பிரச்சனைகளும் பாடம் தான், வரும் இன்னல்கள் தான் நல்ல பாடங்களை கற்றுத்தரும், கற்றுக் கொள்ளும் அளவிற்கு இருக்கும். சரியாக சீக்கிரமாக எளிதாகவும் கற்றுக் கொள்வோம். நல்லவைகளிலிருந்து இன்னல்கள் நீங்கும் வித்தைப் பற்றி கற்றுக் கொள்வோம், அது உண்மையில் இன்னல் களைப் பற்றிய பாடம் தான். அவை நல்லவை என்று சொல்ல முடியாது.

மகாபாரத்தில் ஒரு இடத்தில், தர்மர் மற்றும் துரியோதனன் இருவருள் யாருக்கு இளவரசன் பட்டம் சூட்டுவது என நிர்ணயிக்கும் தேர்வாக ஒரு கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு தீர்ப்பு வழங்க பணிக்கப்படுகின்றது. அனைத்திலும் முதல் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் துரியோதனனோ மூவருக்கும் மரண தண்டனையைப் பிறப்பிக்கின்றார். ஆனால் தீர விசாரித்த தர்மர், அதில் படித்த அந்தணருக்கு மரணதண்டனையும், புத்திசாலியான வணிகருக்கு அயுள் தண்டனையும், படிப்பறிவில்லா சூத்திரனுக்கு 5 ஆண்டு கால சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கின்றார். படித்ததினால் மரணதண்டனையா? அல்லது படிக்காததால் வெறும் சிறைதண்டனையா? என்ற கருத்திற்கே இடமில்லை. படித்ததின் பலனை பயன்படுத்தத் தெரியாதவனுக்கு முடிவு பெரிய இன்னலாக பெரிய பாடத்தைக் கற்றுத்தருகின்றது. எனவே வாழ்வில் வரும் இன்னல்கள் அனைத்தும் பெரும் பாடத்தைத் தான் கற்றுத் தரும் என்பது தெளிவு.

வாழ்க்கைப் பாடம் வயது வரம்பின்றி அனைவருக்கும் பொதுவானதாக உள்ளது. இது வாழ்க்கையின் பொக்கிஷங்களில் ஒன்று, **கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு,** என்பார்கள். ஆனால் வாழ்க்கைப் பாடமோ, உங்கள் கையளவு தான், ஆனால் அதை வைத்துக் கொண்டு உலகத்தை படித்து விடமுடியும். கையளவு என்பது உங்கள் கையில் அமைந்திருக்கும் எண்ணங்களால் ஆன கைரேகை யளவு என்றும் கூறலாம். ஆகையால் தானோ "எண்ணமே வாழ்வு" என்றும், "உங்கள் வாழ்வு உங்கள் கைகளில் உள்ளது" எனவும் கூறுகின்றனரோ! உங்களை நீங்கள் படித்து விட்டால், உலகினையே படித்துவிடலாம். ஏனெனில் உலகினை அளக்க முடியாது. அது போன்று எண்ணங்களை அளக்க முடியாது. எண்ணம் கடல் போன்றது, கடலுக்கு கரையே யில்லை, எண்ணங்களுக்கு எல்லையேயில்லை. இவ்வளவு மகத்தான எண்ணங்கள் என்ற

எழுத்தால் ஆனதுதான் நமது வாழ்க்கைப் பாடம்.

பாடம் என்றால் அதில் பயிற்சி (practice), திருப்பிப்பார்த்தல் (Revice) ஆராய்ச்சி (Research), சோதனை (Experiment), அனுபவம் (Experience), தேர்வு (Examination), முடிவு (Result), திரும்ப மதிப்பாய்வு (Revalue) புதிய முடிவு (Re-result) என்று அனைத்தும் உண்டு. இவற்றுள் எவற்றையெல்லாம் கடைப்பிடித்து வந்தோம் என்று நாம், நமக்கு நாமே பார்க்க வேண்டும். நான் இவ்வளவு தான் படித்துள்ளேன் எனவும், நான் இத்தனை பட்டம் வாங்கியுள்ளேன் எனவும் பேசும் நாம் மேலே கண்ட எவற்றை எல்லாம் வாழ்க்கையில் யோசித்துப் பார்த்திருக்கின்றோம்?

வாழ்க்கைப் பாடம் எங்கு துவங்குகினறது, எங்கு முடிகின்றது? உயிரானது உடலை எடுத்து வாழ்க்கைப்பாடத்தை ஆரம்பிக்கின்றது, உடலைத் துறந்து முடிக்கின்றது. மீண்டும் மற்றொரு உடலில் தொடர்கின்றது. உலகீய படிப்பிற்கான பட்டத்தை உடலின் பெயருக்கு பின் போடு கின்றோம். ஆனால் வாழ்க்கைப் பாடம், உடலால் படிப்பதன்று, உயிரால் உள்ளத்தால் படிப்பதாகும். இந்த உடல், எழுதப்படிக்கப் பயன்படும் காகிதம் போன்றதாகும். இந்த வாழ்க்கைப் பாடத்தால் அன்பு, அறிவு, அமைதி., ஆனந்தம். ஆற்றல் மற்றும் தூய்மை என்ற பட்டங்கள் உயிருக்கு சொந்தமான தாகின்றது. உடலுக்கு அல்ல. அந்த குண அலகு, உடலால் தெரிவிக்கப்படுகிறது மற்றும் மற்றவர் களுக்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.

வாழ்க்கைப் பாடத்தில் முழுவெற்றி அடைய. நல்லெண்ணங்கள் (Positive thoughts), காலந்த வறாமை (Time Management), இதன் ஆதாரத்தில் அமையும் ஆரோக்கியம் (Health), தெய்வீக குணங்கள் சக்திகள் என்ற செல்லவங்கள் (Wealth). இவையனைத்திற்கும் முடிவாகக் கிடைப்பது மன மகிழ்ச்சி (Happiness) மற்றும் முழு திருப்தியாகும் (Satisfaction).

எழுத்தறிவித்தவர்களை இறைவன் போல் கருதும் நாம் யாராலும் கற்றுத்தரமுடியாத, கற்றுத்தரஅவசியமில்லாத வாழ்க்கைப்பாடம் எவ்வளவு உயர்ந்தது. எழுத்தை பார்க்க முடியும், படிக்கமுடியும். வாழ்க்கைப்பாடமதை உணரத்தான் முடியும். பார்த்தறிவதைவிட உணர்ந்தறிவதே உயர்ந்தது. உருவமில்லாத வைகளுக்கு எல்லாம் ஜோதி எனப்பெயரிட்டு நம் பெரியவர்கள் உருவம் தந்துள்ளனர். ஆகையால் உணர்ந்தறிவதை ஞானஒளி எனவும், ஞானப்பிரகாசம் எனவும் அழைக்கின்றனர். வாழ்க்கையைப் படித்தவர்கள் இறுதியில் உணர்வின் வழி உருவாகும் ஞானத்தை பழத்தை பலனாக அடைகின்றனர்.

ஒவ்வொருவரிடமிருந்தும் பாடமாக எதை விரும்புகின்றோமோ அதை நம்மால் கற்றுக் கொள்ளமுடியும். இந்த உலகில் நம்மைச் சுற்றி தீமைதான் உள்ளது என்று அதை விலக்கி வாழ முடியாது, மாறாக கொஞ்சம் நல்லவையும் இருக்கும் அல்லவா! அவற்றை நம் வாழ்க்கை யின் பிரதானமாகக் கொண்டு நடப்பவர்கள் முன்னேற்றம் அடைகின்றனர். இந்த உலகில் எல்லாத் திறமை களும் உள்ளவர்களும் இல்லை, எந்த திறமையுமே இல்லாதவர்களும் இல்லை, சிறகுகள் இல்லாத பறவைக்கு கனத்த கால்கள் உண்டு, வண்ணமில்லாத மலர்களுக்குத் தான் வாசம் கூடுதலாக உண்டு.

வாழ்க்கையில் உலக பிரபஞ்சம் நமக்கு தந்திருக்கும் வாய்ப்பும் (chance), வசதியும் (facility), தேர்ந்தெடுப்பும் (choice), பயன்பாடு (utility), போன்றவற்றை பாடமாக அடைபவரே வாழ்க்கைப் படகைக் கரை சேர்ப்பார்.

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40
அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5 R.No.49463/87